வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 29.06.2023 வியாழக்கிழமை | இதழ் : 202 | பக்கங்கள் : 16

# ரணில் விரித்துள்ள வலையில் தமிழ் கட்சிகள் சிக்கமாட்டா!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



கொழும்பு, ஜூன் 29

"அரசியல் தீர்வு - அபிவிருத்தி" என்ற பெயரில் ரணில் விக்கிரமசிங்க விரித்துள்ள வலையில் சிக்க எதிர்க் கட்சிகள் தயார் இல்லை. எதிரணியிலுள்ள தமிழ் கட்சியினரும் ரணிலின் வலையில் சிக்கமாட்டார்கள் - இவ்வாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

"தேசிய இனப்பிரச்னைக்குத் தீர்வு காணவும், நாட்டின் அபிவிருத்திக்குப்

15

# 24 மணி நேரத்தில் மட்டும் 7 சிறுமிகள் துஷ்பிரயோகம்!

கொழும்பு, ஜூன்

நேற்று காலையுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 7 சிறுமிகள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவங்கள் தொடர்பில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் 17-18 வயதுடைய சிறுவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பதிவான ஏழு சம்பவங்களில் நான்கு சம்பவங்கள் கட்டாயப்படுத்தப் பட்டவை. மற்றைய மூன்று சம்பவங்கள் காதல் உறவுகளால் ஏற்பட்டவை என்றும்

15

## எரிந்த நிலையில் இளைஞன் சடலமாக மீட்பு

வவுனியா, ஜூன் 29

எரிந்த நிலையில் இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். வவுனியா காத்தார் சின்னகுளம் பகுதியை சேர்ந்த அஜந்தன் வயது 23 என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இளைஞர் தொழிலுக்கு சென்றிருந்த நிலையில், அவரின் பெற்றோரும் வீட்டை விட்டு வெளியேறியிருந்தனர். மதியம் அவர்கள் வீடு திரும்பியபோது வீட்டின் பின்புறத்தில் எரிந்த நிலையில் இளைஞனின் சடலம் மீட்கப்பட்டது.

இது தொடர்பில் இளைஞரின் பெற்றோர் வவுனியா பொலிஸாருக்கு தகவல் அளித்த நிலையில் சடலத்தை மீட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# 13இன் முழுமையான நடைமுறையே புலம்பெயர் தமிழரின் எதிர்பார்ப்பும்!

## இலங்கைவாழ் தமிழர் நலன் விரும்பிகள் அமைப்பு

- 13ஐ அடைய தமிழ் கட்சிகள் ஒன்றாகவேண்டும்
- தமிழ் எம். பிக்கள் ஜனாதிபதியுடன் பேச வேண்டும்
- மாகாண சபை தேர்தலை உடன் நடத்த வேண்டும்

லண்டன், ஜூன் 29

**மாகாண சபைகள் தேர்தல், 13ஆவது திருத்தம் ஆகியவை இந்தியா, அமெரிக்காவால் முழுமையாக ஆதரிக்கப்படுகின்றன. எனவே, அனைத்து தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் அரசியல் வேறுபாடுகளைத் தீர்த்து 13ஆம் திருத்தத்தை ஏற்பதுடன், தேர்தலுக்கான இலக்காக இதனை அடையவும் உடன் ஒன்றிணைய வேண்டும் - என்று இலங்கைவாழ் தமிழர் நலன்விரும்பிகள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.**

அத்துடன், 13ஆம் திருத்தத்தை வடக்கு, கிழக்கில் முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியில் அதிகளவான ஆதரவு உள்ளது. இது அவர்களுக்கு தேவையான நம்பிக்கையை அளிப்பதுடன் நிலையான முதலீட்டு வாய்ப்புகளையும் கொண்டுவரும் என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

ஜனாதிபதியுடனான



பேச்சு முயற்சிகள் சிறந்த முன்னேற்றம் என்று கூறியுள்ள அந்த அமைப்பு ஜனாதிபதியின் அழைப்புக்காக தமிழ்க் கட்சிகள் காத்துக்கொண்டிருக்காமல் அவையாகவே சென்று உரிமையுடன் ஜனாதிபதியுடன் பேச வேண்டும் என்றும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

ஈழத்தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து அதிகளவில் வாழும் நாடுகளில் செயல்பட்டு வரும் இலங்கைவாழ் தமிழர் நலன் விரும்பிகள் அமைப்பின் உலகளாவிய ஒருங்கிணைப்பாளர் ராஜ் சிவநாதன் "தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு அவசர வேண்டுகோள்" என்று கோரி நேற்று விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அந்த அறிக்கையின் முழு வடிவம் அப்படியே வருமா,

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில்

15

## கலைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளை மீளநிறுவ சட்டம்

### புதிய வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஜூன் 29

கலைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களை மீண்டும் நிறுவுவதற்கான அதிகாரத்தை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு வழங்கும் வகையில், பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொடவின் தனிப்பட்ட பிரேரணை சட்டமூலமாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், மாநகர சபைகள் திருத்தச் சட்டம் மற்றும் பிரதேச சபை சட்டம் ஆகிய சட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள

15

## ஈழத்தில் அபாயகரமான விகிதத்தில் இந்துக்களின் தொகை குறைகின்றது

பா. ஜ. க. தமிழ்நாடு தலைவர் எச்சரிக்கை

விரிவான செய்தி பக்கம் 4இல்



## துப்பாக்கி சூட்டில் ஒருவர் படுகாயம்!

### கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, ஜூன் 29

காரில் பயணித்தவர்கள் மீது மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் நடத்திய துப்பாக்கி சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கிளிநொச்சி உதயநகர் பகுதியில் நேற்று புதன் கிழமை நள்ளிரவு 12.10 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில், படுகாயமடைந்த

15

## உள்நாட்டு கடன் சீரமைப்பு; அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஜூன் 29

நிதி அமைச்சு முன்வைத்த கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்கு அமைச்சரவை நேற்று பிற்பகல் ஏகமனதாக அங்கீகாரம் அளித்ததாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

விசேட அமைச்சரவை கூட்டம் நேற்று பிற்பகல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

15



# அஸ்வெசும திட்டம் குறித்து நாமல் எம். பியும் அதிருப்தி

கொழும்பு, ஜுன் 29

அரசாங்கத்தின் புதிய சமூக நலத் திட்டமான அஸ்வெசும தொடர்பான பிரச்னைகள் தொடர்பில் முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

சிறீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில், யார் மிகவும் தகுதியானவர் என்பதைத் தீர்மானிக்க சரியான ஆய்வுக்கு நாமல் அழைப்பு விடுத்துள்ளார்.

"தகுதியான பெறுநர்களைத் தீர்மானிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது ஏற்கனவே சமுர்த்தியை பெற்றுக் கொண்டிருப்ப வர்களுக்கு பெரும் அநீதியை ஏற்படுத்தியுள்ளது. அநீதிக்கு ஆளான சமுர்த்தி பெறுநர்களுக்கு உதவுவதற்கு நான் அர்ப்பணிப்புடன் உள்ளேன்" என்றார்.

'அஸ்வெசும' திட்டம் ஏழைகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் பிரச்னையாக மாறக்கூடாது. "அஸ்வெசும பிரச்னையை கையாளும் போது அரசியல் சார்புகளுக்கு அடிபணியாமல், மனிதாபிமான கண்ணோட்டத்தில் பிரச்னையை பார்க்குமாறு நான் அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறேன்," - என்றார். (ஐ)

# ஆலய வழிபாட்டில் ஈடுபட்டிருந்த மூதாட்டியின் சங்கிலி அறுப்பு!

யாழ்ப்பாணம், ஜுன் 29

கோயிலில் வழிபாட்டில் ஈடுபட்டுகொண்டிருந்த போது மூதாட்டி அணிந்திருந்த சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் அறுத்துச் சென்றுள்ளனர்.

கிளிநொச்சி மீனாட்சி அம்மன் ஆலயத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மூதாட்டி கோவிலில் வழிபாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் மூதாட்டியின் சங்கிலியை அறுத்துவிட்டு தப்பிச்சென்றனர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# ஐஸ் போதை நுகர்ந்த இளைஞர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 29

அதிகளவு ஐஸ் போதைப் பொருளை நுகர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

பண்டத்தரிப்பை சேர்ந்த குறித்த இளைஞர் ஐஸ் போதைப்பொருளை நுகர்ந்த நிலையில் அவருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அவர் சங்கானை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

சடலம் உடல்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் இளவாலைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# புதிய அதிபர் நியமனம்; உயர்நீதிமன்றம் தடை!

கொழும்பு, ஜுன் 29

இலங்கை அதிபர் சேவையின் மூன்றாம் தரத்துக்கு புதிய நியமனங்கள் வழங்குவதை தடுத்து உயர்நீதிமன்றம் நேற்று தடை உத்தரவைப் இது தொடர்பான மனு சுமண சந்ர தேரரால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த மனு நேற்று பரிசீலனைக்கு அழைக்கப்பட்டபோது இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அஸ்வெசும விவகாரத்தை அரசியலாக்க வேண்டாம்!

## அமைச்சர் ஜீவன் கோரிக்கை

கொழும்பு, ஜுன் 29

அஸ்வெசும சமூக நலன்புரி கொடுப்பனவை பெறுவதற்கு தகுதி இருந்தும் உத்தேச பெயர் பட்டியலில் பெயர் இடம் பெற்றிருக்காவிட்டால் அது தொடர்பில் எதிர்வரும் ஜுலை 10ஆம் திகதிக்குள் மேன்முறையீடு செய்யுமாறு அமைச்சர் ஜீவன் தொண்டமான் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மக்களை வீதிகளுக்கு இறக்கி போராட்டங்களை நடத்துவதைவிட, அவர்களை மேன்முறையீடு செய்வதற்கு ஊக்குவிக்குமாறு அரசியல் பிரமுகர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன் எனவும் அமைச்சர் கூறினார்.

நேற்று அவர் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

"அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுக்கான பெயர் பட்டியலை தயாரிக்கும்போது பெருந்தோட்ட மக்கள் புறக்கணிக்கப்படக்கூடாது என்ற கோரிக்கை எம்மால் முன்வைக்கப்பட்டது. உலக வங்கி மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க ஆகியோருடனும் இது தொடர்பில் பேச்சு நடத்தி தீர்வொன்றை பெற்றிருந்தோம்.

ஏனெனில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஈ.பி.எவ்., ஈ.டி.எவ். பிடிபடுவதால் சமுர்த்தி கொடுப்பனவின் போது கடந்த காலங்களில் அவர்கள் புறக்கணிக்கப்பட்டனர். இம்முறை அந்த குறைபாடு நிவர்த்தி செய்யப்பட்டது.

அஸ்வெசும திட்டத்தில் புறக்கணிப்பு இடம்பெற்றுள்ளது எனக் கூறி தலவாக்கலையில் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் அரசியல் சூழ்ச்சி உள்ளது என எண்ணத் தோன்றுகிறது. போலியான முறையில் தகவல்களும் பரப்பட்டு வருகின்றன. இதனை எம்மால் ஏற்க முடியாது.

அஸ்வெசும திட்டம் தொடர்பில் ஜுலை 10 ஆம் திகதி வரை மேன்முறையீடு செய்ய முடியும். "ஒன்லைன்" ஊடாகவும், பிரதேச செயலகங்களிலும் அதனை செய்யலாம்.

தமது பெயர், பட்டியலில் இருந்து நீக்கப்பட்டால் மேன்முறையீட்டு உதவியை நாடலாம். தோட்டங்களில் இருந்து 52 வீதமானோர் இத்திட்டத்துக்கு விண்ணப்பித்திருந்தனர். பெயர் இல்லாவிட்டால் எமக்கு தெரியப்படுத்துங்கள். இல்லையேல் நீங்களாகவே மேன்முறையீடு செய்யலாம். நாமும் தகவல்களை திரட்டி வருகின்றோம் -என்றார்.

# பருத்தித்துறை மெதடிஸ்த பாடசாலை 200 ஆண்டு நிறைவு முத்திரை வெளியீடு!




வடமராட்சி, ஜுன் 29

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர தேசிய பாடசாலையின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று தபால் முத்திரை வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி பாலராணி சிறிதரன் தலைமை நடைபெற்ற இந்தநிகழ்வில் தபால் தபால் மா அதிபர் ருவான் சரத்குமார கலந்து கொண்டு தபால் முத்திரை தலையை வெளியிட்டு வைத்தார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ. சிறி, சிறப்பு விருந்தினர்களாக யாழ். மறை மாவட்ட ஆயர், வடமராட்சி வலய கல்வி பணிப்பாளர் சத்தியபாலன், வலயக்கல்வி அலுவலக பிரதி கல்வி பணிப்பாளர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஹாட்லிக் கல்லூரி அதிபர் கலைச்செல்வன் அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் அனைத்துலக நாடுகளின் கிளை தலைவிகள் மற்றும் உறுப்பினர்கள், கல்லூரி பழைய மாணவிகள், கல்லூரி அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள், பெற்றோர்கள், என நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இதே வேளை கல்லூரியின் மாணவிகளால் 21 வீணைகள் கொண்டு இசை நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது. இது இலங்கையில் இரண்டாவது அதி கூடிய வீணை இசை கலைஞர்களின் நிகழ்ச்சி - வடக்கில் முதல் நிகழ்ச்சி என்று கூறப்படுகின்றது. (02)

# அஸ்வெசும நலன்புரி திட்டத்தில் பாதிக்கப்பட்டோர் முறையிடலாம்

## முல்லைத்தீவு பதில் அரச அதிபர்

முல்லைத்தீவு, ஜுன் 29

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசின் அஸ்வெசும திட்டத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மேன்முறையீடு செய்யுங்கள் என முல்லைத்தீவு மாவட்டத்தில் பதில் அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அரசின் அஸ்வெசும கொடுப்பனவில் பெயர் நீக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றைய தினம் கேப்பாபிலவு மக்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கூடி மாவட்ட செயலக வாயிலை மூடி கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த விடயம் குறித்து அவர் கருத்து வெளியிடுகையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் 23ஆயிரத்தி 901 குடும்பங்கள் சமுர்த்தி பயனாளிகளாக இருந்துள்ளார்கள். அதில் 16 ஆயிரத்தி 211 குடும்பங்களுக்கு சமூக நலன்புரிசபையின் நன்மைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதனால், ஏற்கனவே சமுர்த்தி நன்மையை அனுபவித்த மக்கள் விடுபட்டுள்ளார்கள். மாற்றுவலுவுடைய வர்கள் பெண்களை தலைமைத்துவமான குடும்பங்களும் விடுபட்டுள்ளார்கள். அவர்களிடம் இருந்து மேல் முறையீட்டை பெற்றுக்கொள்ளும் முகமாக கிராம அலுவலகர் பணிமனைகளில் முறைப்பாட்டை ஏற்றுக் கொள்ளக்கூடிய அனைத்து வாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஏற்கனவே வெளியிடப்பட்ட பெயர் விபரத்தில் பல வசதியானவர்களும் உள்வாங்கப்பட்டுள்ளதை காணக்கூடியதாக இருக்கின்றது. அது தொடர்பிலான ஆட்சேபனையை பொதுமக்கள் நேரடியாகவே இணையத்தளம் ஊடாகவோ தெரியப்படுத்துவதன் ஊடாக மேன்முறையீட்டு சபை ஆய்வு மேற்கொண்டு தகுதியானவர்கள் விடுபட்டிருந்தால் அவர்களை உள்ளீர்க்ககூடியதாக இருக்கும்.

எதிர்வரும் ஜுன் 10ஆம் திகதி வரை மேன்முறையீட்டை மேற்கொள்ளலாம் இன்னும் சில முறைப்பாடுகள் எங்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

சில தகுதியான குடும்பங்கள் கூட சமூக நலன்புரிதிட்டத்தில் விண்ணப்பிப்பதற்கு தவறிவிட்டுள்ளார்கள் அவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் மேன்முறையீடு செய்ய வாய்ப்புகள் இல்லாவிட்டாலும் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் அளவில் விடுபட்டவர்களுக்கான மேல்முறையீடுகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பமும் இருக்கின்றது இதன் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் நன்மை பெறமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# உணவு விஷமடைந்ததால் 40 மாணவர்கள் பாதிப்பு

கொழும்பு, ஜுன் 29

உணவு விஷமடைந்தமையினால் மகா ஓயா நில்லம்ப பகுதியில் அமைந்துள்ள பாடசாலையொன்றின் 40 இற்கும் அதிக மாணவர்கள் சுகவீனமடைந்தனர்.

குறித்த மாணவர்கள் மகா ஓயா ஆரம்ப வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மாணவர்கள் நேற்றுக் காலை உணவை உட்கொண்ட பின்னர் இவ்வாறு சுகவீனமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

Eelanadu
29.06.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், ஆனி 14

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

## பா. ஜ. க. என்ன செய்யும்?

பாரதிய ஜனதா (பா. ஜ.) கட்சியின் தமிழ்நாட்டு தலைவர் அண்ணாமலை இங்கிலாந்துக்கு விஜயம் செய்திருந்தார். இதன்போது, அவருக்கு புலம்பெயர் அமைப்புகள் அமோக வரவேற்பை வழங்கியிருக்கின்றன. குறிப்பாக, இங்கிலாந்தை தளமாகக் கொண்டியங்கிவரும் முன்னணி தமிழ் புலம்பெயர் அமைப்பான பிரித்தானிய தமிழர் பேரவையின் (BTF) ஏற்பாட்டிலும் ஒரு சந்திப்பு நடைபெற்றுள்ளது. இதன்போது, அண்ணாமலை இந்தியா 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் உறுதியாக இருப்பதாகத் தெரிவித்திருக்கின்றார்.

இதனை கூறுவதற்கு அண்ணாமலை தேவையில்லை – இது தமிழர்கள் அனைவரும் அறிந்த விடயம்தான். இந்தியாவின் நிலைப்பாட்டை இந்திய இராஜதந்திரிகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் தெரிவித்திருக்கின்றனர். அண்மைக்காலமாக இந்தியாவின் ஆளும் கட்சியான பா. ஜ. கவை நாடிச் செல்வதன் மூலம் – அத்துடன், அதன் கருத்தியல் தலைமையான ஆர். எஸ். எஸ். அமைப்பை நாடிச் சென்றால் நன்மைகள் விளையக்கூடுமென்று சிந்திக்கும் போக்கொன்று ஈழத் தமிழ் அமைப்புகள் மத்தியில் காணப்படுகின்றது. இந்த வரிசையில் தற்போது பிரித்தானிய தமிழர் பேரவையும் சேர்ந்திருக்கின்றது.

தமிழ்நாட்டில் திராவிட கட்சிகளின் செல்வாக்கை – குறிப்பாக, ஆளும் ஸ்டாலின் தலைமையிலான திராவிட முன்னேற்ற கழகத்தின் செல்வாக்கை சரிக்கும் தேர்தல் வியூகம் ஒன்றில் பா. ஜ. க. ஈடுபட்டு வருகின்றது. அதற்காக பல்வேறு வழிகளிலும் முயற்சித்து வருகின்றது. இந்தப் பின்புலத்தில்தான் அண்ணாமலை ஈழத் தமிழர் தொடர்பில் அவ்வப்போது பேசிவருகின்றார். இதற்கு முன்னர் இருந்த தமிழ்நாடு பா. ஜ. க. தலைவர்களுடன் ஒப்பிட்டால் அண்ணாமலை சற்று வேகமாக இயங்கி வருகின்றார். இந்தப் பின்புலத்தில் நோக்கினால் புலம்பெயர் அமைப்புகளின் வரவேற்பு அவருக்கு ஆதாயமானது. ஆனாலும், அண்ணாமலை இந்திய மத்திய அரசின் இலங்கை தொடர்பான கொள்கை நிலைப்பாட்டுக்கு மாறாக எதனையும் பேசவில்லை. அதில் அவரிடம் தெளிவு தெரிகின்றது.

ஆனால், இங்கு பிரச்னை பா. ஜ. க. எந்தளவுக்கு ஈழத் தமிழர் விவகாரத்தில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய நிலையிலிருக்கின்றது. ஏனெனில், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் இந்தியாவின் நிலைப்பாடு தொடர்பில் இந்திய பாராளுமன்றத்தில் வை. கோபாலசாமி கேள்வி எழுப்பியபோது, அதற்கு பதிலளித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெயசங்கர் இவ்வாறு கூறுகின்றார் – “நாங்கள் இலங்கை தொடர்பில் பின்பற்றி வருகின்ற கொள்கை நிலைப்பாடானது முன்னைய அரசாங்கங்களின் நிலைப்பாடுதான். முன்னைய அரசாங்கங்கள் எவ்வாறு செயல்பட்டனவோ அதனையே நாம் தொடர்கின்றோம். அதாவது, இலங்கையை நாங்கள் இன அடிப்படையில் பார்க்கவில்லை – அதனை முழுமையாகவே நோக்குகின்றோம்.

பா. ஜ. க. அரசாங்கத்தின் நிலைப்பாடு இவ்வாறிருகின்றபோது, பா. ஜ. கவை அணுகுவதன் மூலம் எதனை சாதிக்க முடியும்? அல்லது இந்திரா காந்தி காலத்தில் இந்தியா எடுத்தது போன்றவாறான கடும்போக்கு நிலைப்பாடொன்றை பா. ஜ. க. எடுப்பதற்கான வாய்ப்பு இருப்பின் அது வேறு விடயம். ஆனால், அவ்வாறு தெரியவில்லை. வெளியாரை நோக்கிச் செல்வதில் தவறில்லை. ஆனால், அதற்கு முன்னர், உள்ளுக்குள் பலமாக இருக்கின்றோமா என்பதை உற்று நோக்க வேண்டும். தாயக அரசியல் சூழலை பலப்படுத்தாமல் புலம்பெயர் அமைப்புகள் எவ்வாறான நகர்வுகளை முன்னெடுத்தும் எதுவும் ஆகிவிடப் போவதில்லை.

# கறுப்பு பட்டியலில் 83 வைத்தியர்கள்!

*கொழும்பு, ஜூன் 29*

*மருத்துவ பயிற்சி மற்றும் ஏனைய தேவைகளுக்காக வெளிநாடுகளுக்குச் சென்று பணிக்கு சமூகமளிக்காத 83 வைத்திய நிபுணர்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாக மருத்துவ சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் பிரியந்த அத்தபத்து தெரிவித்தார்.*

*அமைச்சுக்கு தெரிவிக்காமல் வெளிநாடு சென்ற 83 விசேட வைத்தியர்கள் சேவையை கைவிட்டதாக நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளதாக பொது கணக்குகளுக்கான பாராளுமன்ற குழு தெரிவித்துள்ளது.*

*இதன்படி வெளிநாட்டில் பயிற்சி பெற்று சான்றிதழ் பெற்று அண்மையில் விசேட வைத்தியராக மாறிய 250 பேரில், 50 பேர் வேலைக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.*

*இவ்வாறு வெளிநாடு செல்பவர்கள் பிணைப் பணத்தைச் செலுத்தவேண்டும் எனவும், வெளிநாடு சென்றவர்களிடம் இருந்து பிணைப் பத்திரத்தை மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பிரியந்த அத்தபத்து கூறினார்.*

*வெளிநாடு சென்றுள்ள வைத்தியர்களுக்கு நாடு திரும்புமாறு கடிதம் வழங்கப்படும் எனவும், கடிதம் வழங்கப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் அவர்கள் நாடு திரும்பாவிட்டால் சேவையை விட்டு வெளியேறுவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.*

*சுகாதார அமைச்சின் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக பொதுக் கணக்குகளுக்கான நாடாளுமன்றக் குழுத் அதன் தலைவரும, இராஜாங்க அமைச்சருமான லசந்த அழகியவன்ன தலைமையில் பாராளுமன்ற வளாகத்தில் கூடியது. அந்த சந்திப்பில் இது தொடர்பான தகவல்கள் வெளியாகின.*

*இதேவேளை, இவ்வருடம் மே 31ஆம் திகதி வரையில் 677 வைத்தியர்கள் பயிற்சிக்காக வெளிநாடு சென்றுள்ளதாகவும், அடுத்த இரண்டு வருடங்களில் அவர்கள் நாடு திரும்ப வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.*

*இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன,*

*இவர்கள் வரும் வரை எதனையும் உறுதியாக கூற முடியாது. இந்த விசேட வைத்தியர்கள் வராத பட்சத்தில் சிறிய வைத்திய சாலைகள் பாதிக்கப்படலாம் எனவும் இது தொடர்பில் பரவலாக பேசப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.*

*மேலும் 612 வைத்தியர்கள் பயிற்சிக்காக வெளிநாடு செல்ல தயாராகி வருவதாகவும், பொருளாதார நெருக்கடிகள் காரணமாகவே வைத்தியர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதாகவும், பிள்ளைகளின் படிப்புக்கான பணத்தைத் தேடுவது மற்றுமொரு நம்பிக்கை எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். (அ)*

# மலையக பகுதிகளில் மண் சரிவு அபாயம்!

*கொழும்பு, ஜூன் 29*

*மலையகத்தில் நிலவி வரும் மோசமான காலநிலை காரண மாக மலையகத்தின் பல பகுதிகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.*

*இதனடிப்படையில், நோட்டன் - தியகல பிரதான வீதியில் தியகல பகுதியில் இருந்து சுமார் ஒன்றரை கிலோ மீற்றர் தொலைவில் மண்சரிவு ஏற்பட்டு பொது போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது.*

*இதனால் மழையுடன் ஹற்றன்-கொழும்பு பிரதான வீதியில் கலுகல, பிட்டவல, நானுஓயா, கினிகத்தேனை, கடவல, வட்டவளை தியகல, ஹற்றன் உள்ளிட்ட பிரதேசங்களிலும் ஹற்றன்-நுவரெலியா பிரதான வீதியில் குடாஓயா கொட்டகலை, தலவாக்கலை, சென்கிளையார், நானுஓயா, ரதல்ல ஆகிய பகுதிகளில் மழை யுடன் அடிக்கடி பனி மூட்டம் நிகழ்வதனால் இந்த வீதிகளை பயன்படுத்தும் சாரதிகள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என போக்குவரத்து பொலிஸார் கோரியுள்ளனர்.*

*தொடர்ந்து நுவரெலியா மாவட்டத்தில் பல பிரதேசங்களில் மழை பெய்து வருவதனால் பல இடங்களில் மண் சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது.*

*இதனால் மண் மேடுகளுக்கும் மலைகளுக்கும் சமீபமாக வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு இடர் முகாமைத்து மத்திய நிலையம் கேட்டுள்ளது. (அ)*

# பகிரங்க பொதுக்கூட்டம்!


*யாழ்ப்பாணம், ஜூன் 29*

*புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி 45ஆவது ஆண்டு பகிரங்கப் பொதுக் கூட்டம் எதிர்வரும் ஜூலை 3ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.*

*நல்லூர் இலங்கை இளம் கலைஞர் மன்றத்தில் கட்சியின் செயல்குழு உறுப்பினர் சோ. தேவராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், கட்சியின் பொதுச் செயலாளர் சி. கா. செந்திவேல், தேசிய அமைப்பாளர் வெ. மகேந்திரன், தேசிய கலை இலக்கிய பேரவை க. தணிகாசலம், மலையக பிராந்திய செயலாளர் டேவிட் சுரேன், வட பிராந்திய செயலர் கா. செல்வம் கதிர்காமநாதன், வவுனியா மாவட்ட செயலர் ந. பிரதீபன், புதிய ஜனநாயக இளைஞர் முன்னணி சிறிபிரகாஷ், பெண் விடுதலை சிந்தனை அமைப்பின் பி. பிரசாந்தினி, சமூக செயல்பாட்டாளர் சத்தியமலர் இரவீந்திரன், புதிய ஜனநாயக இளைஞர் முன்னணி கே. ஜிந்திசன் ஆகியோர் உரையாற்றுவர்.*

*பொதுக் கூட்டத்தின்போது, புகைப்படக் கண்காட்சி, புத்தகக் கண்காட்சி, கலைநிகழ்வுகள் என்பனவும் நடைபெறவுள்ளன. (ஐ)*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் விஜபிகள் வாடிக்கையாளர் ஆவர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். அமோகமான நாள்.

**மிதுனம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். கனவு நனவாகும் நாள்.

**கடகம்**
எதிர்பார்த்த சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். மறுக்கப்பட்ட விஷயங்கள் இன்று முடியும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**சிம்மம்**
தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள். அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். தைரியம் கூடும் நாள்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த கோபம் டென்ஷன் யாவும் நீங்கும்.வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். புதிய வாய்ப்புகள் தேடி வரும். உற்சாகமான நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நாவடக்கம் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். பணிகளை போராடி முடிப்பீர்கள். போராடி வெல்லும் நாள்.

**தனுசு**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோர்கள் பக்க பலமாக இருப்பார்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மகரம்**
அனுபவ பூர்வமாகவும் அறிவுப் பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். மரியாதைக் கூடும். சாதிக்கும் நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும்.வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். மேலதிகாரி குறை கூறுவார்.

# இலங்கை பிரச்னைக்கு தீர்வு காண பிரதமர் மோடியால்தான் முடியும்!

## பிரிட்டனில் அண்ணாமலை தெரிவிப்பு

லோர்ட்ஸ், ஜுன் 29

பிரதமர் மோடியால்தான் இலங்கை பிரச்னைக்குத் தீர்வு காண முடியும் என்று தமிழக பா. ஜ. க. தலைவர் கே. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் தமிழ் சங்கம் மற்றும் சங்கமத்தில் நேற்று முன்தினம் அவர் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையில் நிலவும் பிரச்னை சுமார் 80 முதல் 85 ஆண்டுகளாக உள்ளது. 2009 இலங்கைத் தமிழர்கள் வரலாற்றிலேயே மிகத் துயரமான ஆண்டாக அமைந்தது. அதற்கு முக்கிய பொறுப்பு, அப்போதைய காங்கிரஸ் அரசு.

கடந்த 9 ஆண்டுகளில், பிரதமர் மோடி தலைமையிலான இந்திய அரசு, இலங்கையின் வட - கிழக்கு பகுதி மற்றும் மத்திய பகுதிகளில் தமிழ் மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்துள்ளது. யாழ்ப்பாண கலாசார மையத்தைப் அமைத்துக் கொடுத்துள்ளது. கொழும்புடன், யாழ்ப்பாணத்தை இணைக்கும் ரயில் போக்குவரத்து அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது, சென்னை - பலாலி விமான நிலையம் இடையே தினசரி விமான சேவை நடைபெறுகிறது. காரைக்கால் - காங்கேசன்துறை துறைமுகம் இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து விரைவில் தொடங்கப்படும்.

அண்மையில் பொருளாதார பாதிப்படைந்த இலங்கைக்கு, 380 கோடி டொலர் அளவிலான கடனுதவி, 40 ஆயிரம் தொன் டீசல் மற்றும் பெற்றோல்ல், காய்கறிகள், உணவுப் பொருள்கள் என உதவி, இலங்கையை சரிவிலிருந்து காப்பாற்றியது இந்திய அரசு.

ஈழத்தில் மிகவும் அபாயகரமான விகிதத்தில் இந்து சமயத்தைப் பின்பற்றும் மக்கள் தொகை குறைந்து வருகிறது. இந்த மாற்றங்களை தடுக்க இலங்கை அரசுடன் இணைந்து பிரதமர் மோடி முனைப்புடன் பணியாற்றி வருகிறார்.

தமிழர்களின் தொல்லியல் தலங்கள், தமிழர்களின் தனித்துவமான கலாசாரம் மற்றும் அடையாளத்தை வெளிப்படுத்துபவை. யாழ்ப்பாணத்தில் பெருமளவில், பௌத்த தொல்லியல் தலங்கள் உருவாகி வருவதால் பிற்காலத்தில், தமிழர்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையே அமைதியில் விரிசல் ஏற்படும் அபாயம் உள்ளது.

இலங்கை இராணுவம், தமிழர் பகுதியில் வளமான விவசாய நிலங்களை ஆக்கிரமித்து முகாம்கள் அமைத்திருக்கின்றன. ஈழத் தமிழர்களின் பிரச்னைகள் குறித்து இலங்கை பிரதமருக்குக் கொண்டு செல்லும் முயற்சியின் விளைவாக, இரண்டு வாரங்களுக்கு முன்பாக மலையகப் பகுதியிலிருந்து செந்தில் தொண்டமான் எனும் தமிழர், புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். அவரின் நியமனம் தமிழ் மக்களின் பெரும்பாலான முக்கிய பிரச்னைகளை தீர்க்கும் என்ற நம்பிக்கையை உருவாக்கியுள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்கு சம உரிமை வழங்கும் 13ஆம் சட்டத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதே இலங்கைப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு என்று பிரதமர் மோடி, தனது இலங்கை பயணத்தின்போது வலியுறுத்தினார் என்றார் அவர்.

(ஐ)

# நடராஜர் கோயிலின் கனகசபையில் பொலிஸ் பாதுகாப்புடன் வழிபாடு!

கடலூர், ஜுன் 29

சிதம்பரம் நடராஜர் கோயில் கனகசபையில் ஏறி வழிபட இந்துசமய அறநிலையத் துறையினர் முயற்சித்தனர். அவர்களை கீழே தள்ளி விட்டு தீட்சிதர்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

சிதம்பரம் நடராஜர் கோயிலின் கனகசபையில், பக்தர்கள் வழிபட அனுமதிப்பதில்லை என்று இக்கோயிலின் தீட்சிதர்கள் முடிவெடுத்து செயல்படுத்தி வந்தனர். இதற்கு கடும் எதிர்ப்பு எழுந்ததால் கனகசபையில் வழிபட அனுமதி அளித்து இந்து சமய அறநிலையத் துறை உத்தரவிட்டது. அதன்படி பக்தர்கள் வழிபட்டு வந்தனர்.

இதனிடையே, ஆனி மாத திருமஞ்சன தரிசன விழாவையொட்டி கடந்த 24ஆம் திகதி தொடங்கி, நேற்றுமுன்தினம் வரையில் 4 நாட்கள் பக்தர்கள் கனகசபையில் (சிற்றம்பல மேடை ணயில்) ஏறி வழிபட தடை விதித்து, கோயிலை நிர்வகிக்கும் தீட்சிதர்களால் அறிவிப்பு பதாகை வைக்கப்பட்டது.

இதுதொடர்பான முறைப்பாடுகள் வர, இந்து சமய அறநிலைத்துறையினர் கடந்த 24ஆம் திகதி பதாகையை அகற்ற சென்ற போது, தீட்சிதர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டு தகராறு செய்தனர். இதனை தொடர்ந்து பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் தீட்சிதர்கள் வைத்த அந்த அறிவிப்பு பதாகை அகற்றப்பட்டது. பதாகையை அகற்றிய பிறகும் தீட்சிதர்கள் பக்தர்கள் மற்றும் பொதுமக்களை கனகசபையில் ஏறி வழிபட மறுத்து வந்தனர்.

தாடர்ந்து இந்து சமய அறநிலைய துறையின் அலுவலர்கள் அரசு ஆணையை நிறைவேற்றும் வகையில், மற்றொரு வழியாக பொலிஸாருடன் கனகசபைக்கு ஏறி வழி பட முயன்றனர். தீட்சிதர்கள் அவர்களை ஏறவிடாமல் தடுத்து கீழே தள்ளி விட்டனர். மேலும் தீட்சிதர்கள் கனக சபையை பூட்டிவிட்டு, கீழே வந்து பொலிஸ் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். நேற்றுமுன்தினம் இரவு 9 மணியைத் தாண்டியும் இச்சர்ச்சை நீடித்தது. கோயிலைச் சுற்றி ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

# தமிழ்த் தேசியத்தை கைவிட்டால் சீமான் பா. ஜ. கவுடன் நெருங்கலாம்!

## அந்தக் கட்சியின் மூத்த தலைவர் ராஜா

சிவகங்கை, ஜுன் 29

“தமிழ் தேசியம் என்ற பிரிவினைவாதத்தை சீமான் கைவிட்டுவிட்டால், பா. ஜ. கவுடன் அவர் நெருங்கி வரலாம்” என தமிழக பாஜகவின் மூத்த தலைவர் எச்.ராஜா தெரிவித்துள்ளார்.

சிவகங்கையில் பா. ஜ. க. சார்பில் நடைபெற்ற மத்திய அரசின் 9 ஆண்டு கால சாதனை விளக்க கண்காட்சியை எச். ராஜா தொடங்கி வைத்தார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

“நாட்டின் குடிமகன் யார் வேண்டுமானாலும் அரசியலுக்கு வரலாம். விஜய் அரசியலுக்கு வருவதை வரவேற்கிறேன். திரையுலக பிரபலம் மட்டுமே அரசியலுக்கு உதவாது என திருமாவளவனின் கருத்தை ஏற்கிறேன்.

இந்த நாட்டை கொள்ளையடித்தோரில் ப. சிதம்பரமும் ஒருவர். அவர் அதிகமாக பேசக் கூடாது. கடந்த 2014ஆம் ஆண்டு மோடி தலைமையிலான பா. ஜ. க. ஆட்சி அமையவில்லை என்றால் இந்தியா பிச்சைக்கார நாடாக மாறியிருக்கும்.

“சீமான் பேசக் கூடிய விசயங்களை அவருக்கு முன்பே நான் பேசியிருக்கிறேன். சீமான் தமிழ்த் தேசியத்தை கைவிட்டால் பா. ஜ. கவுடன் நெருங்கி வரலாம். தமிழ் தேசியம் என்பது பிரிவினைவாதம், இந்திய தேசியம் என்பதே ஒற்றுமை. மற்றபடி அவர் திராவிடத்தை எப்படி ஏற்றுகொள்ளவில்லையோ, நானும் ஏற்றுகொள்ளவில்லை. சீமான் என் நண்பர். பிரிவினைவாதத்தை விட்டு, பகுத்தறிவோடு சிந்தித்து அவரின் நிலைப்பாட்டில் மாற்றம் வருகிறதா என பார்ப்போம். மாற்றம் வந்தால் அடுத்து பேசுவோம்” என்றார்.

(ஐ)

# நான் பதவி விலகும் அவசியம் கிடையாது

## கூறுகிறார் அமைச்சர் கெஹலிய



**கொழும்பு, ஜுன் 29**

**மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு தேவையான நிதி கிடைக்காவிட்டால் தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்வேன் என அண்மையில் பாராளுமன்றில் தெரிவித்திருந்தமை தொடர்பில் சுட்டிக்காட்டிய சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, உரிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால் பதவி விலகப் போவதில்லை என தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் பாராளுமன்றத்தில் இந்த அறிக்கையை வெளியிட்ட அன்றே திறைசேரி அதிகாரிகளுடன் ஒரு சந்திப்பை நடத்தினோம். அங்கு மருந்துகள் மற்றும் பிற முக்கியமான மருத்துவ உபகரணங்களை வாங்குவதற்கான நிதி உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

போதிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால், நான் பதவி விலக வேண்டிய அவசியம் இல்லை.

பாராளுமன்றத்தில் நான் கூறியதை சில ஊடகங்கள் தவறாகப் புரிந்து கொண்டுள்ளன - என்றார். (அ)

# வங்கி விடுமுறை குறித்து வீண் அச்சம் வேண்டாம்!

## கூறுகிறார் அகில விராஜ் காரியவசம்

கொழும்பு, ஜுன் 29

மக்களின் வைப்புத் தொகையில் எவரும் கை வைக்க முடியாது என ஜனாதிபதியின் ஆலோசகரும், ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்து மத்திய வங்கியின் ஆளுநர் தெளிவாக கூறியுள்ளதாகவும், எனவே, உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் எவரும் அச்சம் கொள்ள வேண்டியதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

வங்கி விடுமுறை வழங்குவது தொடர்பில் நாட்டில் தேவையற்ற கருத்தியல் உருவாக்கப்பட்டுள்ளதாக அகில விராஜ் காரியவசம் சுட்டிக்காட்டினார்.

மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக தயாரிக்கப்பட்ட அஸ்வசும போன்ற திட்டங்களை அரசியல் நிகழ்ச்சி நிரல்களில் உள்ளடக்க கூடாது என தெரிவித்த காரியவசம், அனைத்தும் நியாயமான முறையில் விநியோகிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (அ)

# விசேட வைத்தியர்களின் ஓய்வு வயதெல்லை நீடிப்பு

கொழும்பு, ஜுன் 29

அரச சேவை விசேட வைத்தியர்களின் ஓய்வு வயதெல்லையை 63 வயது வரை நீடிக்க சுகாதார அமைச்சின் செயலாளர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு இறுதிக்குள் 610 மருத்துவ நிர்வாகிகள், சிறப்பு மருத்துவர்கள் மற்றும் வைத்தியர்கள் ஓய்வு பெற உள்ள நிலையிலேயே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

மேலும், 60 வயதுக்கு மேற்பட்ட சுமார் 50 விசேட வைத்தியர்கள் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் தொடர்ந்தும் பணியாற்ற வேண்டுமென சுகாதார அமைச்சு நிதியமைச்சுக்கு யோசனையொன்றை முன்வைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும், அண்மைக்கால மாகவே நாட்டில் சுகாதாரத் துறை தொடர்பான பிரச்னைகள் அதிகரித்துவரும் நிலையில், தற்போது இவ்வாறான ஒரு முடிவை எட்டியிருப்பது சிறந்தது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# சீனாவில் இருந்து இலங்கைக்கு நேரடி விமான சேவை ஜுலையில்

கொழும்பு, ஜுன் 29

சீனாவில் இருந்து இலங்கைக்கு நேரடி விமான சேவையை ஆரம்பிக்க எயார் சீனா நிறுவனம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் ஜுலை மாதம் மூன்றாம் திகதி முதல் விமான சேவைகள் இடம்பெறவுள்ளதாக கட்டுநாயக்க விமான நிலையம் தெரிவித்துள்ளது.

சீனாவின் சிச்சுவானில் இருந்து கட்டுநாயக்கவுக்கு மூன்று விமானங்களும், கட்டுநாயக்கவிலிருந்து சீனாவின் சிச்சுவானுக்கு மூன்று விமானங்களும் சேவையில் ஈடுபடவுள்ளன. (அ)

# சுகாதார அமைச்சின் 259 வாகனங்கள் வெளித் தரப்பினரின் பாவனைக்காக!

கொழும்பு, ஜுன் 29

சுகாதார அமைச்சின் 259 வாகனங்கள் வெளித்தரப்பினருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக பொது கணக்குகளுக்கான பாராளுமன்றக் குழுவின் (கோபா குழு) தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

அதன்படி, சுகாதார அமைச்சின் 1794 வாகனங்கள் காணாமல் போயுள்ளதாக குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவற்றுள், 679 மோட்டார் வாகனங்களும், 1115 மோட்டார் சைக்கிள்களும் உள்ளடங்குவதாக கண்டறியப்பட்டுள்ளது.

பெரும்பாலான கார்கள் தற்போது சுகாதார அமைச்சிடம் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த கணக்காய்வின் மூலமாக 425 வாகனங்கள் தொடர்பான தகவல்களை வெளிக்கொணர முடிந்துள்ளதோடு, அவை தொடர்பில் முறைகேடுகள் ஏதுவும் நடந்துள்ளதா என்பதை கண்டறிவது கடினமாக உள்ளதாக சுகாதார அமைச்சின் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

1115 மோட்டார் சைக்கிளில் 11 மோட்டார் சைக்கிள்கள் பற்றிய தகவல்கள் மட்டுமே தெரியவந்துள்ளன.

மேலும், இவற்றில் பெரும்பாலான மோட்டார் சைக்கிள்கள் கள அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை ஜனாதிபதி செயலகத்துக்கு சொந்தமான 51 வாகனங்கள் காணாமல்போயுள்ளதாகவும், இந்த வாகனங்களின் பெறுமதி தொடர்பான தகவல்களோ அல்லது இந்த வாகனங்கள் பற்றிய தகவல்களை தேடியறிய முடியவில்லை என, தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவிக்கிறது. (அ)

# 7 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு இலங்கையில் இரட்டைக் குடியுரிமை

கொழும்பு, ஜுன் 29

இலங்கையின் வரலாற்றில் முதன்முறையாக அதிகளவான கடவுச்சீட்டுக்கள் வழங்கப்பட்ட ஆண்டாக, 2022ஆம் ஆண்டு பதிவாகியுள்ளது.

2022ஆம் ஆண்டு மாத்திரம் 9 இலட்சத்துக்கும் அதிகமான கடவுச்சீட்டுகளை (911,689) குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் வழங்கியுள்ளது.

2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இது மூன்று மடங்கு அதிகரிப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னொருபோதும் இல்லாதவகையில் இலங்கையின் பொருளாதாரம் கடந்த ஆண்டு வீழ்ச்சியடைந்ததோடு, வங்குரோத்தடைந்த நாடாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து இலங்கையர்கள் பலரும் வெளிநாடுகளுக்கு செல்ல ஆரம்பித்துள்ளனர்.

இதனால், கடந்த ஆண்டு கடவுச்சீட்டுகளுக்கு அதிகளவான கேள்விகள் நிலவியதால் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தைக் காட்டிலும் அதிகளவான வருமானத்தை இலங்கையின் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் பெற்றிருக்கிறது.

கடந்த ஆண்டு மாத்திரம் 23.8 பில்லியன் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.

கடந்த வருடம் மாத்திரம் 249 இராஜதந்திர கடவுச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

223 வெளிநாட்டவர்கள் இலங்கைக்குள் வருவதற்கு கடந்த வருடம் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதோடு, பாகிஸ்தானிலிருந்து வந்த 84 பேரும், இந்தியாவிலிருந்து வந்த 70 பேரும் இதில் உள்ளடங்குகின்றனர்.

இலங்கையின் குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தை மீறிய 501 வெளிநாட்டவர்கள் கடந்த வருடம் வெளியேற்றப்பட்டுள்ளனர். இதில் 401 பேர் இந்தியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் 219 பேர் இலங்கையில் அகதி அந்தஸ்தை கோரியிருக்கிறார்கள்.

அதன்படி, பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களே அதிகளவில் இலங்கையில் அகதி அந்தஸ்தைக் கோரியிருக்கிறார்கள்.

கடந்த ஆண்டின் இறுதியில் ஆப்கானிஸ்தான், ஈரான், மியன்மார், பாகிஸ்தான், சூடான் உள்ளிட்ட 12 நாடுகளைச் சேர்ந்த 512 வெளிநாட்டவர்களுக்கு இலங்கையில் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானைச் சேர்ந்த 347 பேருக்கே அதிகளவில் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா மற்றும் சுவிஸ்சர்லாந்து உள்ளிட்ட 10இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 7 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இலங்கையில் இரட்டைக் குடியுரிமையைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பதித்திருக்கிறார்கள்.

7 ஆயிரத்து 166 பேருக்கு இலங்கையில் இரட்டைக் குடியுரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# அவுஸ்திரேலியா சென்றுள்ள அநுரவுக்கு கடும் பாதுகாப்பு

கொழும்பு, ஜுன் 29

அவுஸ்திரேலியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்கவின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அங்கியிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



அவுஸ்திரேலியா சென்றுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தற்போது இலங்கையர்கள் பங்குபற்றும் சில கூட்டங்களில் கலந்து கொண்டு வருகிறார்.

கடந்த 22 ஆம் திகதி இலங்கையில் இருந்து அவுஸ்திரேலியா புறப்பட்டுச் சென்ற அவர், நேற்று முன்தினம் பேர்த் நகரில் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அநுரகுமார திஸாநாயக்கவின் பாதுகாப்பு கருதி அவரது அவுஸ்திரேலியா பயணத்திற்காக இரண்டு விமான நிறுவனங்களில் பயணச் சீட்டுக்கள் முன்பதிவு செய்யப்பட்டிருந்தன. அத்துடன் அவர் அங்கு தங்குவதற்காக இரண்டு ஹோட்டல்கள் முன்பதிவு செய்யப்பட்டிருந்தன.

எனினும் பாதுகாப்பு காரணங்களுக்காக அவர் நண்பர் ஒருவரின் வீட்டில் தங்கியுள்ளதுடன் தனியார் பாதுகாப்புச் சேவையின் சேவையையும் பெற்றுக்கொண்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் அவுஸ்திரேலிய கிளையின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அநுரகுமார கலந்துகொள்ளும் கூட்டங்களுக்கு அவரை அழைத்துச் செல்வதற்காக கட்சியினர் அடங்கிய பாதுகாப்பு வலயத்தை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அநுரகுமார திஸாநாயக்க, இந்த விஜயத்தின் போது அவுஸ்திரேலியாவின் ஏனைய மாநிலங்களுக்கும் விஜயம் செய்ய உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சதொச நிறுவனத்துக்கு ரூபா 1,500 கோடி நட்டம்!

## கண்டறிந்துள்ளது கோப் குழு

கொழும்பு, ஜூன் 29

லங்கா சதொச நிறுவனத்துக்கு 2021 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை 1500 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக பொது நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்ற குழுவில் (கோப் குழு) தகவல் வெளியாகியுள்ளது.

லங்கா சதொச நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக பொது நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்றக் குழு அதன் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ரஞ்சித் பண்டார தலைமையில் பாராளுமன்ற வளாகத்தில் கூடியது. இந்தத் தகவல் அந்தச் சந்திப்பில் தெரியவந்தது.

2022ஆம் ஆண்டில் மட்டும் அந்த நிறுவனத்துக்கு ஏற்பட்ட நட்டம் 60 கோடி ரூபா என கோப் குழு தெரிவித்துள்ளது.

லங்கா சதொச நிறுவனத்துக்கு அரிசி இறக்குமதியின் போது 600 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் கோப் குழுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனித பாவனைக்காகக் கொண்டு வரப்பட்டு கால்நடை தீவனத்துக்காக விற்பனை செய்யப்பட்ட அரிசி காலாவதியானதால் இந்த நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்காலத்தில் இது தொடர்பில் மேலும் கலந்துரையாட கோப் குழு தீர்மானித்துள்ளது.

லங்கா சதொச நிறுவனத்துக்கு பொருத்தமான வர்த்தக மாதிரி ஒன்றைத் தயாரித்து அதனை இலாபகரமானதாக மாற்றவேண்டியதன் அவசியத்தை குழு சுட்டிக்காட்டியுள்ளது.

லங்கா சதொச நிறுவனம் 2021-2024 ஆம் ஆண்டுக்கான திட்டவட்டமான திட்டத்தைக் கொண்டுள்ளது. ஆனால் அது அமைச்சினால் அங்கீகரிக்கப்படவில்லை. இதனால், 2028 ஆம் ஆண்டு வரை விரிவான திட்டத்தை தயாரித்து, அதன் செயல்பாடுகள் குறித்து 2 மாதங்களுக்குள் அறிக்கை அளிக்கும்படி அதிகாரிகளுக்கு குழு தலைவர் தெரிவித்தார்.

ஒரே நேரத்தில் செயல் திட்டத்தை தயாரிக்கவும் அறிவுறுத்தினார்.

அரிசி இறக்குமதியில் 600 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருப்பது குறித்தும் தனித்தனியாக விவாதிக்க குழு முடிவு செய்தது.

சதொச நிறுவனம் புறக்கோட்டை மொத்த விற்பனையாளர்களிடம் பொருட்களை வாங்கி விற்காமல், இறக்குமதிப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு குறைந்த விலையில் பொருட்களை விற்பனை செய்யும் சந்தர்ப்பத்தை நழுவவிடுவதாக குழுவில் கலந்துரையாடப்பட்டது.

மேலும், அரசு எடுக்கும் கொள்கை முடிவுகளின் அடிப்படையில் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டாலும், பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதால் ஏற்படும் இழப்பு குறித்து அதிகாரிகள் உண்மைகளை விளக்கினர்.

கணக்காய்வாளர் நாயகம், உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் வெளிப்புறத் தலையீடுகள் இன்றி சுயாதீனமாக முடிவெடுக்கக்கூடிய வணிக மாதிரியின் கீழ் இந்த நிறுவனத்தை நியமிக்கவேண்டியதன் அவசியத்தையும் தலைவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், லங்கா சதொச கடைகளுக்கு அதிகளவான வாடிக்கையாளர்களை ஈர்க்க வேண்டியதன் அவசியம் குறித்தும் குழுவில் வலியுறுத்தப்பட்டது.

இந்த நிறுவனத்தில் 1123 பணியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

லங்கா சதொச நிறுவனத்தின் தலைவர்களை ஒகஸ்ட் 22ஆம் திகதி மீள அழைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, தயாசிறி ஜயசேகர, நிமல் லான்சா, ஜயந்த சமரவீர, எஸ்.எம் .எம்.முஷாரப், எஸ்.எம். மரிக்கார், சஞ்சீவ எதிரிமான்ன, சாணக்கியன் இராசபுத்திரன், மதுர விதானகே, பேராசிரியர் சரித ஹேரத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(அ)

# கடையை உடைத்துப் பொருட்கள் திருடிய கடற்படைச் சிப்பாய் கைது

கொழும்பு, ஜூன் 29

விடுமுறையில் வீட்டுக்கு வந்து வர்த்தக நிலையங்களை உடைத்துப் பொருட்களைக் கொள்ளையிட்ட கடற்படைச் சிப்பாயை தாம் கைது செய்ததாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை கடற்படைத் தலைமையகத்தில் கடமையாற்றும் களுத்துறை கித்துலாவ பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதான கடற்படைச் சிப்பாயே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

களுத்துறை நகருக்கு மத்தியில் அமைந்துள்ள வீட்டு மின் தளபாடங்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையத்தை மூன்று முறை உடைத்துப் பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய நடத்திய விசாரணைகளில் மூன்று முறையும் ஒரே நபர் திருட்டில் ஈடுபட்டுள்ளமை சி.சி.ரி.வி காட்சிகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதனடிப்படையில் கைது செய்யப்பட்ட நபர் தனது வீட்டில் மறைத்து வைத்திருந்த மின் விசிறிகள், அயன் பெட்டிகள், மின் அடுப்புகள், தலைக் கவசங்கள் உட்பட 15 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை பொலிஸார் கைப்பற்றினர்.

வர்த்தக நிலையத்தின் கதவு சுத்தியல் மூலம் உடைக்கப்பட்டுள்ளதுடன் அந்த சுத்தியலையும் பொலிஸார் மீட்டனர்.

(அ)

# ஹோமாகம வாகன விபத்தில் பொலிஸ் பரிசோதகர் மரணம்

கொழும்பு, ஜூன் 29

ஹோமாகம பொலிஸ் விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றும் பிரதான பரிசோதகர் ஒருவர் நேற்றுக் காலை மகும்புர அதிவேக வீதி நுழைவாயிலுக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை கல்துட பெலவத்தையைச் சேர்ந்த ஜகத் சமிந்த பெரேரா என்ற (வயது-47) இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த பொலிஸ் பரிசோதகரை எதிரே வந்த பஸ் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் படுகாயமடைந்த பொலிஸ் பரிசோதகர் சிகிச்சைக்காக ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

(அ)

# வங்கி ஊழியர் கையாடிய நகைகளின் ஒரு பகுதி வைப்பாளர்களிடம் மீளளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29

மக்கள் வங்கியின் திருநெல்வேலி சேவை நிலையத்தில் அடகு வைக்கப்பட்ட நகைகளை அங்கு பணியாற்றிய ஒருவர் கையாடிச் சென்றதன் காரணமாகத் தமது நகைகளை மீட்க முடியாமல் பாதிக்கப்பட்டிருந்த வாடிக்கையாளர்களில் 20 பேருக்கு அவர்களது நகைகள் உயர் நீதிமன்றப் பதிவாளர் உட்பட நீதிமன்ற அதிகாரிகள் முன்னிலையில் மீள வழங்கப்பட்டன.

வாடிக்கையாளர்களில் ஒரு தொகுதியினருக்கு நீதிமன்றக் கட்டளைக்கு அமைவாக நகைகளை மீளளிக்கும் நிகழ்வு நேற்று மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் கே.கோடீஸ்வரன் தலைமையில் திருநெல்வேலிக் கிளையில் நடைபெற்றது.



இந்த நிகழ்வில், மக்கள் வங்கியின் கிளை வலையமைப்புக்குப் பொறுப்பான பிரதிப் பொது முகாமையாளர் ரி.எம். டபிள்யூ. சூரியகுமார, பிராந்திய சட்ட அதிகாரி திருமதி எஸ்.சுகாஸ், பல்கலைக்கழகக் கிளை முகாமையாளர், திருநெல்வேலி கிளை முகாமையாளர், உயர் நீதிமன்றப் பதிவாளர், உட்பட நீதிமன்ற அதிகாரிகள் மற்றும் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களும் கலந்துகொண்டனர்.

பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களில் 20 பேருக்கு முதற்கட்டமாக நகைகள் மீளளிக்கப்படுவதாகவும், மீதமுள்ளவர்களுக்கு அடுத்துவரும் வாரங்களில் படிப்படியாக நகைகள் மீளளிக்கப்படவுள்ளன என்றும் வங்கி அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த அடகு நகை மோசடி 2012 இல் இடம்பெற்றது. மக்கள் வங்கி திருநெல்வேலி வாடிக்கையாளர் சேவை நிலையத்தில் தமது நகைகளை அடகு வைத்த பலர் இதனால் பாதிக்கப்பட்டிருந்தனர். எனினும் கடந்த ஜனவரி மாதம் வரை வங்கி அதிகாரிகள் எவரும் இது குறித்து வாடிக்கையாளர்களுக்காக எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அதன்பின் பல்கலைக்கழகக் கிளை முகாமையாளர், திருநெல்வேலி கிளை முகாமையாளர் மற்றும் பிராந்திய முகாமையாளர் ஆகியோரின் அழைப்பின் பேரில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த பிரதிப் பொது முகாமையாளர் ரி.எம். டபிள்யூ. சூரியகுமார பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுடன் நேரடியாகச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் 11 வருடங்களின் பின் வங்கியின் சார்பில் வாடிக்கையாளர்களுக்கு உத்தரவாதக் கடிதமும் வழங்கப்பட்டிருந்தது.

நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாக அந் நகைகளை மீளக் கையளிப்பதில் தடங்கல் ஏற்பட்டிருந்தது. எனினும் இவ் வருட ஆரம்பத்தில் வழக்கு மாவட்ட நீதிமன்றத்திலிருந்து உயர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்ட நிலையில் வங்கியின் சமர்ப்பணத்துக்கு அமைய நிபந்தனைகளுடன் நகைகளை மீளளிப்பதற்கு உயர் நீதிமன்றம் கட்டளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

(அ)

# முஸ்லிம் பாடசாலைகளுக்கு நாளை விசேட விடுமுறை!

கொழும்பு, ஜூன் 29

நாட்டில் உள்ள அனைத்து முஸ்லிம் பாடசாலைகளுக்கும் நாளை வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இன்று நடைபெறும் ஹஜ் பெருநாளை முன்னிட்டு அனைத்து முஸ்லிம் பாடசாலைகளுக்கும் நாளை வெள்ளிக்கிழமை விசேட விடுமுறை வழங்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்நிலையில் வியாழக்கிழமை வழங்கப்படும் விடுமுறைக்குப் பதிலாக ஜூலை 8 ஆம் திகதி முஸ்லிம் பாடசாலைகள் இயங்கும் என்றும் கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# மின் கட்டணக் குறைப்பு; இறுதி தீர்மானம் நாளை

கொழும்பு, ஜூன் 28

இலங்கை மின்சார சபையினால் முன்வைக்கப்பட்ட மின்சார கட்டணத்தை குறைப்பதற்கான யோசனை தொடர்பில் இறுதித் தீர்மானம் நாளை வெள்ளிக்கிழமை எட்டப்படவுள்ளது.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, ஜூலை முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் இறுதிக் கட்டணத்தை அறிவிக்க உள்ளது.

கட்டணத் திருத்தங்கள் தொடர்பாக பொதுமக்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நேற்று முன்தினம் விசேட அமர்வொன்றை நடத்தியது.

இதன்படி, பொதுமக்கள் கருத்துக்கள் மற்றும் இலங்கை மின்சார சபை முன்வைக்கும் சூத்திரங்களை கருத்தில் கொண்டு, இறுதி முடிவு அறிவிக்கப்படும்.

ஜூலை முதலாம் திகதி முதல் மின்சாரக் கட்டணத்தை ஒட்டுமொத்தமாக 3.15 வீதத்தால் குறைக்க இலங்கை மின்சார சபை முன்மொழிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# வங்கிக் கட்டமைப்பு வங்குரோத்தடையும்

## சுனில் ஹந்துன்நெத்தி எச்சரிக்கை



கொழும்பு, ஜுன் 29

**ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மாத்திரமல்ல இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க கூறு வதுகூட நேர்மையானதாக இல்லை என மக்கள் விடு தலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.**

அரச வங்கிகளை வங்கு ரோத்து அடைய செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறினார்.

மக்கள் விடுதலை முன்னணி யின் தலைமையகத்தில் நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

மூன்று நாட்களுக்கு மேல் வங்கிகளுக்கு விடுமுறை வழங்குவதால், சர்வதேச வர்த் தகத்தில் ஈடுபட்டுள்ளவர்க ளுக்கு பிரச்சினைகள் ஏற்படும்.

சாதாரணமாக மூன்று நாட்களுக்கு மேல் வங்கிக ளுக்கு விடுமுறை வழங்கப்படு வதில்லை. எனினும் அரசாங்கம் இந்த சம்பிரதாயத்தை மீறியுள் ளது.

வங்கி விடுமுறை தினம் அல் லாத 30 ஆம் திகதி வங்கி விடுமுறை தினமாக அறிவித்து வர்த்தமானி வெளியிடப்பட் டது.

ஏன் இவ்வாறு வங்கிகளுக்கு விடுமுறை வழங்கப்படுகிறது என்பது வங்கியின் பிரதானிக ளுக்கும் தெரியாது.

தேசிய கடனை மறுசீரமைப் பது தொடர்பாக வங்கிகளின் பிரதானிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தவில்லை.

பொருளாதாரத்தை வங்கு ரோத்து அடைய செய்த அர சாங்கம் அதற்கு பதிலை தேடு வதற்கு பதிலாக மக்களுக்கு அவநம்பிக்கையையும் சந்தேகத் தையும் உருவாக்கி, வங்கி கட்டமைப்பை வங்குரோத்து நிலைமைக்கு கொண்டு செல் லும் நடவடிக்கைகளில் ஈடுபட் டுள்ளது.

நம்பிக்கையின் அடிப்படை யில் வங்கிகள் இயங்கி வருகின் றன. வைப்பு செய்துள்ளவர்கள், கடனை பெற்றவர்கள் என வங்கிகளுடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவர்களுடன் ஏற்படுத்த வேண்டிய நம்பிக் கைக்கு பதிலாக சந்தேகத்தை உருவாக்கினால், மக்கள் எதிர்ப்பை வெளியிடுவதை தவிர்க்க முடியாது.

வங்கிகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ள 5 நாட்க ளுக்குள் அவசரமாக பாராளு மன்றத்தை கூட்டுகின்றனர்.

வரவு செலவுத்திட்ட விவா தங்களின் போதும் ஞாயிற்றுக் கிழமைகளில் பாராளுமன்றம் கூட்டப்படுவதில்லை.

பாராளுமன்றத்தை கூட்டி கடனை இரத்துச் செய்யும் யோசனையை நிறைவேற்றுவ தற்காகவே ஜனாதிபதி பிரான்ஸ் விஜயத்தை முடித்துக்கொண்டு வருகிறார் - என்றார். (அ)

# அரச வங்கிகளை விற்கும் அபாயம்!

## எச்சரிக்கிறார் பேராசிரியர்

கொழும்பு, ஜுன் 29

தேசிய கடன் மறுசீரமைப்பு ஊடாக வங்கிக் கடன்களை குறைப்பு செய்தால், அரச வங்கி களை விற்கும் அபாயம் ஏற்படும் என தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார சபை உறுப்பின ரான ஜயவர்தனபுர பல்கலைக் கழக முகாமைத்துவ பீட பேரா சிரியர் அனில் ஜயந்த பெர் னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

5 நாட்கள் விடுமுறை வழங்கி தேசிய கடனை குறைக் கும் நடவடிக்கைகளில் அரசாங் கம் ஈடுபட்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் உறுதிப் படுத்தியுள்ளார்.

இந்த நெருக்கடியான சூழ் நிலையிலும் அரசாங்கம் பொறுப்புக்கூறலைப் புறக்க ணித்து நிதிச் சந்தை கட்ட மைப்பில் அவநம்பிக்கையை ஏற்படுத்தி வருகின்றது.

இது தொடர்பான திட்டங் கள் இன்னும் இறுதி செய்யப் படவில்லை எனவும் தெரிவிக் கின்றனர். இவ்வாறான நிலை மையில் இந்த இரண்டு அல்லது மூன்று நாட்களில் முன்னெடுக் கப்படும் இந்தத் திட்டம் பேர ழிவை ஏற்படுத்தும்.

அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் விபரீதமான சூழ்நிலைகள் ஏற்படும் அபாயம் காணப்பட்டாலும், பொதுமக் கள் தமது வைப்புத் தொகையை இழக்க நேரிடும் என்ற தேவை யற்ற அச்சத்தில் செயற்பட வேண்டாம் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஆனால், அரசாங்கம் இந்த தருணத்தில் பொதுமக்களிடம் இருந்து இப்படி ஒரு தேவை யற்ற அச்சம் ஏற்படுவதை எதிர்பார்க்கின்றதா என்று தெரியவில்லை.

அவர்களிடம் இருந்து பதில் இல்லாததால் குழப்பங்களை உருவாக்கி, ஸ்திரமின்மை ஏற்படுத்த முயற்சிக்கின்றார் களா என்ற சந்தேகம் எழுந்துள் ளது.

அத்துடன் தேசிய கடன் மறுசீரமைப்பு ஊடாக வங்கிக் கடன்களை குறைப்பு செய்தால் அரச வங்கிகளை விற்கும் அபா யம் ஏற்படும் - என்றார். (அ)

# எக்ஸ்பிரஸ் பேர்ள் வழக்கை சிங்கப்பூர் வணிக நீதிமன்றுக்கு மாற்ற இணக்கம்

கொழும்பு, ஜுன் 29

எக்ஸ்பிரஸ் பேர்ள் நஷ்ட ஈட்டு வழக்கை சிங்கப்பூர் சர்வ தேச வணிக நீதிமன்றத்திற்கு மாற்றுவதற்கு காப்புறுதி நிறுவனம் இணங்கியுள்ளது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் நாட்டின் கடற் பரப்புக்கு ஏற்பட்ட சேதத்திற் கான நஷ்டஈட்டை செலுத்து மாறு கோரி, சிங்கப்பூர் நீதி மன்றத்தில் ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த நஷ்டஈட்டு வழக்கை சிங்கப்பூர் சர்வதேச வணிக நீதிமன்றத் திற்கு மாற்றுவது தொடர்பில், காப்புறுதி நிறுவனம் அந்நாட்டு அரசாங்கத்திற்கு அறிவித்துள் ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த வழக்கு சிங்கப்பூரில் எதிர்வரும் 06 ஆம் திகதி மீண் டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் குறிப் பிட்டுள்ளது.

சர்வதேச வணிக நீதிமன்றத் திற்கு வழக்கை மாற்றுவதன் மூலம் நாட்டின் கடற்பரப்புக்கு ஏற்பட்ட சேதத்துக்கு உரிய நஷ்டஈட்டை எவ்வித இடை யூறும் இன்றி பெற்றுக்கொள்வ தற்கான சந்தர்ப்பம் காணப்படு வதாக சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள் ளது.

இதனிடையே, நஷ்டஈட்டு வழக்கு தொடர்பான இணக் கப்பாடு குறித்து கலந்துரை யாடுவதற்காக இலங்கைப் பிரதிநிதிகள் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு பின்னர் சிங்கப்பூருக்கு பயணிக்கவுள்ளதாக திணைக் களம் குறிப்பிட்டுள்ளது.

கலந்துரையாடலுக்கான நிகழ்ச்சி நிரல் தற்போது தயா ரிக்கப்பட்டுள்ளதாகவும் கலந்துரையாடலில் 09 பேர் கொண்ட குழுவினர் கலந்து கொள்ளவுள்ளதாகவும் சட்ட மா அதிபர் திணைக்களம் தெரி வித்துள்ளது. (அ)

# மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபையில் மோசடிகள்

## விசாரணைகள் அவசியம் என்கிறார் சஜித்

கொழும்பு, ஜுன் 29

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை யில் இடம்பெறும் மோசடிகள் தொடர்பில் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் மற் றும் செயலாளர் உரிய நடவ டிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரியுள்ளார்.

அரச மருந்தாளர் சங்க பிரதி நிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அவர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

தேசிய மருந்துகள் அதிகார சபை வினைத்திறனுடன் செயற்பட வேண்டும். இது தொடர்பான கண்காணிப்புக் களை விடயத்துக்கு பொறுப் பான அமைச்சு மேற்கொள்ள வேண்டும் என்றும் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார். (அ)

# இலங்கையில் அடுத்து வரும் தேர்தல் சித்தாந்தங்களின் போராக இருக்கும்

## கூறுகின்றார் ஹர்ஷ டி சில்வா



கொழும்பு, ஜுன் 29

இலங்கையின் அடுத்த தேர்தல், சித்தாந்தங் களின் போராக இருக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றின் நேர்காணலின்போது அவர் இந்த விடயத்தைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சீர்திருத்தங்களை சீர்குலைக்காத, அரசியலை விட தேசிய நலன்களுக்கு முன்னுரிமை வழங்கும் கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி கட்சி வாக்காளர் களிடம் செல்லும்.


உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில், இலங்கை அரசாங்கம் மற்றும் மத்திய வங்கியின் முன்மொழிவுகள் கிடைத்தவுடன் அவற் றைப் பரிசீலிக்க கட்சி தயாராக உள்ளது.

உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பது தவிர்க் கப்பட்டிருக்க வேண்டும் என்றாலும், அது முற் றிலும் இன்றியமையாததாக இருந்தால், சகிப்புத் தன்மையுடன் அதை நிர்வகிக்க முடியும்.

இந்தநிலையில் இன்னும் பகிரங்கப்படுத்தப் படாத மறுசீரமைப்புத் திட்டம், ஜுலை முதலாம் திகதியன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வுள்ளது - என்றார். (அ)

# நலன்புரி உதவி கோரி மரத்தில் ஏறி போராட்டம்

கொழும்பு, ஜுன் 29



நலன்புரி உதவியை பெறுபவர்கள் பட்டிய லில் இருந்து தமது குடும் பத்தின் பெயர் நீக்கப்பட் டதற்கு எதிர்ப்பு தெரி வித்து ஒருவர் மரத்தில் ஏறி போராட்டத்தில் ஈடுபட் டார்.

நேற்று முன் தினம் காலை வெலிபிட்டிய பிரதேச செயலக வளாகத்தில் இந்த சம்பவம் நடந்தது.

நலன்புரி உதவி பெறுபவர் களை தெரிவு செய்வதற்கான பதிவை மேற்கொள்ள யாரும் தமது வீட்டுக்கும் வரவில்லை யென அவர் தெரிவித்தார்.

வெலிகம பொலிஸ் தலைமையக பொலிஸ் பரி சோதகர் உபுல் குமார உள் ளிட்ட அதிகாரிகள் அவரை மரத்தில் இருந்து கீழே இறங்கு மாறு கேட்டனர். ஆனால் உத்தியோகத்தர்கள் வீடு வீடாக ஆய்வு செய்து பதில் அளிக்க வேண்டும் என்பதே அவரது வேண்டுகோளாக இருந்தது.

பிரதேச செயலகத்தினர் உறுதிமொழி கொடுத்ததை டுத்து அவர் மரத்திலிருந்து கீழே இறங்கினார். (அ)

# சுற்றுலாத்துறைக்கு ஆதரவு வழங்க ஜோர்ஜியா இணக்கம்

கொழும்பு, ஜுன் 29

சுற்றுலாத்துறை ஒத்து ழைப்பு தொடர்பில், இலங் கைக்கும், ஜோர்ஜியாவுக்கும் இடையே, புரிந்துணர்வு ஒப்பந் தம் செய்துகொள்வதற்கு இணக்கப்பாடு எட்டப்பட் டுள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவி ருத்தி அதிகார சபைக்கும், ஜோர்ஜியாவின் தேசிய சுற் றுலா நிர்வாக நிறுவனத்துக்கும் இடையே இந்த உடன்படிக்கை கையொப்பமிடப்படவுள்ளது.

குறித்த உடன்படிக்கையை கையொப்பமிடும் நோக்கில், சுற்றுலாத்துறை அமைச்சு முன் வைத்த யோசனைக்கு அமைச் சரவை அனுமதி வழங்கியுள் ளது. (அ)

ஈழநாடு



# ரஷ்ய அதிபர் புடினின் நெருங்கிய வட்டத்தில் உள்ளவர்கள் யார்?

**பால் கிர்பி**

உக்ரேன் மீதான ரஷ்யாவின் முழு வீச்சிலான படையெடுப்பு நீண்டுகொண்டே செல்கிறது. தலைமைத் தளபதியாக, படையெடுப்புக்கான இறுதிப் பொறுப்பு புடினிடமே உள்ளது. ஆனால், அவர் தனக்கென ஒரு சிறிய வட்டத்தைச் சார்ந்திருக்கிறார். அவர்களில் பலர் ரஷ்யாவின் பாதுகாப்புத் துறைக்கான சேவைகளில் தங்களது தொழில்முறை வாழ்வைத் தொடங்கியவர்கள்.

வாக்னர் குழுமத்தின் தலைவர் யெவ்கெனி ப்ரிகோஜின், ஒரு காலத்தில் புடினின் நெருங்கிய, சக்திவாய்ந்த கூட்டாளியாக இருந்தார். ஆனால், அவர் செய்த கிளர்ச்சியின் காரணமாகத் தற்போது அந்த நெருங்கிய வட்டத்தில் அவர் இல்லை. இப்போதைய நிலவரத்தில், போரின் இந்தத் தீர்க்கமான தருணத்தில் புடின் யார் சொல்வதைக் கேட்பார்?

**செர்கேய் ஷோய்கு, பாதுகாப்புத் துறை அமைச்சர்**

பல மாதங்களாக, பாதுகாப்புத் துறை அமைச்சர் செர்கேய் ஷோய்கு, ராணுவத் தலைவர் வேலரி கெராசிமோவ் ஆகியோர் ப்ரிகோஜினுடன் மோதிக்கொண்டே இருந்தனர்.

உக்ரேனில் நடந்த போரில் பல்லாயிரக்கணக்கான ரஷ்ய வீரர்கள் இறந்ததற்கு இவர்கள் இருவரும்தான் பொறுப்பு என்று ப்ரிகோஜின் குற்றம் சாட்டினார்.

அதிபருக்கு நெருக்கமாக யாராவது இருந்தால், அது அவரது பாதுகாப்புத்துறை அமைச்சர்தான். நீண்டகால நம்பிக்கைக்கு உரித்தானவர், கடந்த காலத்தில் அவருடன் சைபீரியாவிற்கு வேட்டையாடுதல் மீன்பிடித்தல் போன்ற பயணங்களுக்கு சென்றவர். ஒரு காலத்தில் புடினின் அரசியல் வாரிசு ஆவதற்கான சாத்தியக்கூறு இவருக்கு உண்டு என்றும் கருதப்பட்டது.

முதலில் ரஷ்யா உக்ரேனை ராணுவமயமாக்குகிறது என்றும் பிறகு 'மேற்கு' நாடுகள்தான் போரைத் தொடக்கியது, ரஷ்யா இல்லை என்றும் புடின் கூறியதையே பின்பற்றினார்.

சில நேரங்களில், அதிபர் புடின் எந்த அளவுக்கு இவர் சொல்வதைக் கேட்பார் என்று தெரிந்தால் ஆச்சர்யப்படுவீர்கள்.

ரஷ்யாவின் ராணுவ பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அது எதிர்பாராத அளவுக்கு உக்ரேனிடம் இருந்து வந்த எதிர்ப்பு, ராணுவத்தின் குறைந்த மன உறுதி ஆகியவற்றுடன் போராடிக் கொண்டிருந்தது.

"ஷோய்குதான் கீயவுக்கு அணிவகுத்துச் செல்ல வேண்டியிருந்தது. பாதுகாப்புத் துறை அமைச்சராக அவர் வெற்றியைக் கொடுத்தாக வேண்டியிருந்தது," என்று ஆயுத மோதலில் நிபுணரான வேரா மிரோனோவா கூறினார்.

இன்னும் அவர் போரில் முக்கியப் பங்கு வகிக்கிறார். இருப்பினும், உக்ரேனில் களத்திலுள்ள உண்மை குறித்து அவர் அதிபர் புடினிடம் பொய்யான தகவலைக் கூறியதாக ப்ரிகோஜின் குற்றம் சாட்டினார்.

வலேரி 2014இல் கிரைமியாவை ராணுவம் கைப்பற்றியதன் பெருமையைப் பெற்றார். ரஷ்ய ராணுவத்தின் புலனாய்வு அமைப்பான க்ருவின் பொறுப்பாளராகவும் அவர் இருந்தார்.

பிரிட்டனில் உள்ள சால்ஸ்பரியில் 2018ஆம் ஆண்டில் நடந்த வேதிமத் தாக்குதல், 2020ஆம் ஆண்டு சைபீரியாவில் எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவ்லனி மீதான வேதிமத் தாக்குதல் ஆகிய இரண்டு குற்றச்சாட்டுகள் அவர்மீது உள்ளன.

மேலும், ரஷ்ய பாதுகாப்பு வல்லுநரும் எழுத்தாளருமான ஆண்ட்ரி சோல்டடோவ், அதிபர் காதுகொடுத்துக் கேட்கும் மிகுந்த செல்வாக்கு மிக்க குரலாக பாதுகாப்பு அமைச்சரே இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

"ஷோய்கு, ராணுவத்தின் பொறுப்பாளர் மட்டுமல்ல. அவர் ஓரளவுக்கு சித்தாந்தத்திற்கான பொறுப்பாளராகவும் இருக்கிறார். ரஷ்யாவில் சித்தாந்தம் என்பது பெரும்பாலும் வரலாற்றைப் பற்றியது. ஷோய்கு அதை வடிவமைப்பவராக இருக்கிறார்."

**வேலரி கெராசிமோவ், முப்படைத் தளபதி**

முப்படைத் தளபதி என்ற முறையில், உக்ரேனை ஆக்கிரமிக்கும் பணியை விரைந்து முடிக்க வேண்டியது அவருடைய வேலை. ஆகவே, புடினின் நெருங்கிய வட்டத்தில் அவர் மிகவும் தேவையானவராக காணப்படுகிறார்.

ஆனால், சோவியத் காலகட்டத்திலிருந்து மிக நீண்டகாலம் பதவியில் இருந்த முப்படைத் தளபதியாக அவர் இருப்பதற்கு இன்னொரு காரணம் உள்ளது. விளாதிமிர் புடினுக்கு அவர்மீது நம்பிக்கை உள்ளதுதான் அந்தக் காரணம்.

1999 செச்சென் போரில் ராணுவத்தை வழிநடத்திய தில் இருந்தது, ரஷ்ய ராணுவ பிரசாரங்களில் முக்கியப் பங்கு வகித்தது, பெலாரூஸில் போருக்கு முந்தைய ராணுவப் பயிற்சிகளை மேற்பார்வையிட்டு உக்ரேன் படையெடுப்புக்கான ராணுவ திட்டமிடலில் முன்னணியில் இருந்தது ஆகியவற்றில் வலேரி பெரும் பங்கு வகித்துள்ளார்.

ரஷ்ய நிபுணர் மார்க் கெலியோட்டி, "சிரிக்காத, கரடுமுரடான, சண்டையை விரும்பக்கூடிய" நபர் என்று ஜெனரல் கெராசிமோவ் குறித்து விவரிக்கிறார். ஜெனரல் கெராசிமோவ் கிரைமியாவை ரஷ்யாவுடன் இணைப்பதற்கான ராணுவ பிரசாரத்தில் முக்கியப் பங்கு வகித்தார்.




உக்ரேன் மீதான படையெடுப்பின் மோசமான நிலை, துருப்புகள் மத்தியில் மன உறுதி குறைந்து வருவது ஆகியவை குறித்த செய்திகள் காரணமாக அவர் ஓரங்கட்டப்பட்டதாக ஆரம்பத்தில் பேசப்பட்டது.

அவர் மே 2022இல் வருடாந்திர மாஸ்கோ ராணுவ அணிவகுப்பில் தோன்றவில்லை. இருந்தும் கடந்த ஜனவரியில் அவர் உக்ரேனில் ரஷ்ய படைகளின் தளபதியாக நியமிக்கப்பட்டார். அவருக்கு முன்பு, இப்போது அவரது துணைத் தலைவராக இருக்கும் ஜெனரல் செர்கேய் சுரோவிகின் தளபதியாக இருந்தார்.

"ஒவ்வொரு சாலையையும் ஒவ்வொரு படையணியையும் புடினால் கட்டுப்படுத்த முடியாது. அதைச் செய்வது தான் இவருடைய வேலை," என்று ஆண்ட்ரி சோல்டடோவ் கூறினார்.

**நிகோலாய் பட்ருஷேவ், பாதுகாப்பு கவுன்சிலின் செயலாளர்**

லண்டன் பல்கலைக்கழக கல்லூரியில் ரஷ்ய அரசியல் தொடர்பான இணை பேராசிரியராக இருக்கும் பென் நோபல், "பட்ருஷேவ் அமைதியான தீர்வுகளை ஆலோசித்து முடிவெடுப்பதைவிட, வலிமையைப் பயன்படுத்தி ஆதிக்கம் செலுத்தக்கூடியவர். பல ஆண்டுகளாக மேற்கு நாடுகள் ரஷ்யாவை கைப்பற்றத் துடிக்கின்றன என்று நினைக்கக்கூடியவர்," என்று கூறுகிறார்.

செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரம் லெனின்கிராட் என்று அழைக்கப்பட்ட காலகட்டத்தில் இருந்தே, 1970களில் புடினுடன் பணியாற்றிய மூன்று விசுவாசிகளில் இவரும் ஒருவர்.

பாதுகாப்பு சேவை பிரிவின் தலைவர் அலெக்சாண்டர் போர்ட்னிகோவ், வெளிநாட்டு உளவுத்துறையின் தலைவர் செர்கேய் நரிஷ்கின் ஆகியோர் புடினுடன் அப்போதிலிருந்து இருக்கும் மற்ற இரண்டு உறுதியான விசுவாசிகள்.

அதிபரின் இந்த நெருங்கிய வட்டம் மொத்தமும் சேர்த்து சிலோவிக்கி என்று அழைக்கப்படுகிறது. அப்படியென்றால் அமலாக்குபவர்கள் என்று பொருள்.

நிகோலாய் பட்ருஷேவ் போன்ற சிலரே அதிபரின் மீது அதிக செல்வாக்கைக் கொண்டுள்ளனர். கம்யூனிஸ்ட் காலத்தில் இருந்த உளவுத்துறை மற்றும் உள்துறை பாதுகாப்பு நிறுவனமான கேஜிபியில் புடினுடன் பணியாற்றியது மட்டுமின்றி, 1999 முதல் 2008 வரை கேஜிபியின் வாரிசு அமைப்பான எஃப்.எஸ்.பியின் தலைவராகவும் நிகோலாய் பட்ருஷேவ் புடினுக்கு பிறகு உருவானார்.

படையெடுப்புக்கு மூன்று நாட்களுக்கு முன்னர், ரஷ்யாவின் பாதுகாப்பு கவுன்சிலின் கூட்டத்தில், பட்ருஷேவ், அமெரிக்காவின் "உறுதியான இலக்கு" ரஷ்யாவை உடைப்பதுதான் என்ற கருத்தை முன்வைத்தார்.

அமெரிக்கா "உயிரி போருக்கு" தயாராவதாகவும், அமெரிக்காவும் பிரிட்டனும் ரஷ்யாவை தோற்கடிக்க வேண்டுமென்ற நம்பிக்கையோடு மேற்கு நாடுகளை வழிநடத்துவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்ட தெற்கு உக்ரேனில் உள்ள ககோஃப்கா அணை தகர்க்கப்பட்டபோது, அமெரிக்கா, பிரிட்டன், நேட்டோ நட்பு நாடுகள் ஆதரவுடன் உக்ரேன் அதைச் செய்ததாக அவர் குற்றம் சாட்டினார்.

**அலெக்சாண்டர் போர்ட்னிகோவ், மத்திய பாதுகாப்பு சேவையின் தலைவர்**

ரஷ்யாவை கூர்ந்து கவனித்து வரும் வல்லுநர்கள், வேறு வழிகளில் வரும் தகவல்களைவிட பாதுகாப்பு சேவைகளிடமிருந்து பெறும் தகவல்களை அதிபர் அதிகம் நம்புவதாகக் கூறுகின்றனர். அத்தகைய நெருக்கிய வட்டத்தில் ஒருவராக அலெக்சாண்டர் போர்ட்னிகோவ் காணப்படுகிறார்.

லெனின்கிராட் காலத்து கேஜிபியில் இருந்து வந்துள்ள மற்றுமொரு பழைய செல்வாக்கு மிக்க நபர் இவர். நிகோலாய் பட்ருஷேவுக்கு பிறகு மத்திய பாதுகாப்பு சேவையின் தலைமைக்கு இவர் வந்தார்.

மத்திய பாதுகாப்பு சேவை மற்ற சட்ட அமலாக்க சேவைகளின் மீது கணிசமான செல்வாக்கைக் கொண்டுள்ளது. அதற்கென சொந்தமாக சிறப்புப் படைகளும் உள்ளன.

அலெக்சாண்டர் போர்ட்னிகோவ் முக்கியமானவர். ஆனால், அவர் மற்றவர்களைப் போல் ஆலோசனை வழங்குவதற்காக நெருங்கிய வட்டத்தில் இல்லை என்று ஆண்ட்ரி சோல்டடோவ் நம்புகிறார்.

**செர்கேய் நரிஷ்கின், வெளிநாட்டு உளவுத்துறையின் இயக்குநர்**

லெனின்கிராட் காலத்தில் இருந்து புடினுக்கு நெருக்கமாக இருந்து வரும் அந்த மூன்று பேரில், இவர் மூன்றாவது நபர். செர்கேய் நரிஷ்கின் தனது தொழில்முறை வாழ்க்கையின் பெரும்பகுதியில் அதிபருடன் இணைந்தே இருந்தார்.

இருப்பினும், போருக்கு முந்தைய நிலைமையைப் பற்றி அவரிடம் தொலைக்காட்சியில் கேட்கப்பட்டபோது அவர் சரியாக விவரிக்காத நேரத்தில், அந்த நீண்டகால நட்பு அவர் மீது கோபம் கொள்வதில் இருந்து அதிபர் புடினை தடுக்கவில்லை.

அதுமட்டுமின்றி, "புடின் தனது நெருங்கிய வட்டத்திற்குள், (நரிஷ்கினை) ஒரு முட்டாளாகக் காட்டக்கூடிய வகையில் வேடிக்கை செய்வதை மிகவும் விரும்புவார்," என்று ஆண்ட்ரே சோல்டடோவ் கூறினார்.

செர்கேய் நரிஷ்கின், 1990களில் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில், 2004இல் புடினின் அலுவலகத்தில் என்று நீண்டகாலமாக அவரது நிழலாக இருந்தவர். அப்படி இருந்தவர், பிறகு இறுதியாக நாடாளுமன்றத்தில் சபாநாயகரானார். அவர் ரஷ்ய வரலாற்று சங்கத்திற்குத் தலைமை தாங்குகிறார். இவர் அதிபரின் செயல்களுக்கான கருத்தியல் அடிப்படைகளை வழங்குவதில் முக்கியமானவர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# மாகாண சபைகளின் வரலாற்றுப் பின்னணி மற்றும் மாகாணசபை தேர்தல்கள் பற்றி தெரிந்து கொள்ளவேண்டிய விடயங்கள் சில

**சாந்தன் கே. தம்பையா**

கடந்த எட்டு தசாப்தங்களாக பல்வேறு கோரிக்கைகள் தமிழ் தரப்பினால் முன்வைக்கப்பட்டன, சில ஒப்பந்தங்களும் அவ்வப்போது ஏற்படுத்தப்பட்டன. பண்டா செல்வா ஒப்பந்தம் முதல் புலிகளின் ஒஸ்லோ ஒப்பந்தம் வரை பல இணக்கங்கள் ஏற்பட்டன ஆனால் இவை எவையுமே செயற்படுத்தப்படாமலே போயின.

சிறிலங்கா அரசியல் யாப்பின் 13வது திருத்தத்தினூடாக கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமை ஒன்றே தமிழ் மக்களின் 80 வருட கால முயற்சிகளுக்கு இதுவரை கிடைத்த பலாபலன் ஆகும். தமிழ் மக்களுக்கு திருப்தி அளிக்கக்கூடிய தீர்வு என்ன என்பதைப்பற்றியும். இனியென்ன கிடைக்கலாம் என்பதை பற்றியும் எமது கனவுகளை சொல்லலாம் ஆனால் இன்றுவரை யாராலும் மாகாணசபையை தவிர வேறு எதையுமே சாத்தியமாக்க இயலவில்லை என்கின்ற யதார்த்தத்தை முதலில் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மாகாணசபை முறைமை 1988ம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. அதேவருடம் நவம்பர் மாதம் 19ம் திகதி இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்று மார்ச் 1990 வரை தமிழ் மாகாண சபை நடைபெற்றது. அன்று ஏற்படுத்தப்பட்ட மாகாண நிர்வாக கட்டமைப்புதான் இன்றும் செயற்பாட்டில் உள்ளது.

1990 இல் புலிகளுக்கும் பிரேமதாச அரசிற்கும் ஏற்பட்ட இணக்கத்தின் காரணமாக கலைக்கப்பட்ட வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபை, 2006ம் ஆண்டு வரை 18 வருடங்கள் இணைந்தே இருந்தது. அதாவது இணைந்த வடக்கு கிழக்கின் நிர்வாகம் திருகோணமலை செயலகத்திலிருந்து ஒரே ஆளுநரால் நிர்வகிக்கப்பட்டது.

1988 இலிருந்து 2006 வரை சிறி லங்காவில் எட்டு நிர்வாக மாகாணங்களே இருந்தன இந்த 18 வருடங்களும் பிரேமதாசாவிலிருந்து மகிந்தா வரை பதவியிலிருந்த ஜனாதிபதிகள் வருடாவருடம் இந்த இணைப்பை தங்களது அதிகாரத்தின்படி புதுப்பித்து வந்தனர் என்பதும் உண்மை.

2006 ஆம் ஆண்டு அக்டோபரில் ஜேவிபியினர் மகிந்தவின் அனுசரணையுடன் உச்சநீதிமன்றம் சென்று அங்கு சரத் சில்வா தலைமையிலான ஐந்து நீதிபதிகளினால், ஜெயவர்த்தனா வடக்கு கிழக்கை இணைத்தமை அவரது அதிகராதிற்கு அப்பால்பட்டது என்று தீர்ப்பளிக்கப்பட்டதை தொடர்ந்து வடக்கு கிழக்கு பிரிக்கப்பட்டது. இந்த பிரிப்பை நிரந்தரமாக்கும் நோக்கத்துடன் மகிந்த 2007 இல் கிழக்கு மாகாண தேர்தலை நடத்தி திருமலையில் கிழக்கு மாகாண அரசை நிறுவினார்.

வடக்கு கிழக்கு பிரிக்கப்பட்ட பொழுது கஜேந்திரகுமார், சம்பந்தன், சுரேஷ், மாவை , செல்வம், உட்பட 22 பாராளுமன்ற உறுப்பினர்களைக்கொண்டு பலமான கட்சியாக இருந்த கூட்டமைப்பினர் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதுடன் 2012 இல் பிரிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்திலும் 2013இல் வடக்கு மாகாணத்திலும் தேர்தல்களில் பங்குபற்றியதன் மூலம் வடகிழக்கு தனியான நிர்வாக மாகாணங்கள் என்ற நிலைப்பாட்டை ஏற்றுகொண்டுள்ளார்கள் என்பதே உண்மை.

1988 இலிருந்து 2007 வரை அதாவது கிழக்கு மாகாண சபை தேர்தல் நடக்கும் வரை 19 வருடங்கள் வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களிலும் மாகாண அரசுகள் தடையின்றி இயங்கின அதனால் பலன் பெற்றன.

1990 இலிருந்து 2012ம் ஆண்டு கிழக்கு மாகாண சபை தேர்தலில் போட்டியிடும் வரை கூட்மைப்பினரும் 13வது திருத்தத்தையும் மாகாண சபை முறைமையையும் முழுமையாக புறக்கணித்தே வந்தனர். மாகாணசபைகள் படிப்படியாக பலவீனமாக்கப்பட்டபொழுது அதுபற்றி எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. வடக்கு கிழக்குக்கான மாகாணசபை தேர்தலை நடத்தும்படி கோரவுமில்லை.

மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படாமல் இருப்பதால் மாகாண சபைகள் இல்லாமல் போய்விடாது. மாகாண நிர்வாகம் ஜனாதிபதியுயின் பிரதிநிதியான ஆளுநரினால் இன்றுவரை தொடர்ந்துகொண்டே இருக்கிறது. வடக்கு கிழக்கில் ஆளுநர்களாக ஓய்வு பெற்ற இராணுவ உத்தியோகத்தர்களும் இருந்திருக்கிறார்கள். எனவே மாகாண தேர்தல்களை கோராமல் இருப்பவர்கள் மறைமுகமாக ஜனாதிபதியின் நேரடி நிர்வாகத்தில் வடக்கு கிழக்கு மாகாண நிர்வாகம் இருப்பதை ஆதரிக்கின்றார்கள் என்று கொள்ளலாம்.

2015ம் ஆண்டு ஜனவரி மாதம் கூட்டமைப்பின் ஆதரவுடன் மைத்திரி ஜனாதிபதியாகவும் 2015 ஆகஸ்ட் மாதம் ரணில் பிரதமராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். நல்லாட்சி அரசென்று சொல்லப்பட்ட இந்த அரசில் 14 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டிருந்த கூட்டமைப்பு ஒரு பங்காளர் போலவே செல்வாக்கு செலுத்தியது. இந்த அரசில் நடந்தேறிய பிணை முறி ஊழல் மற்றும் ரணில் மைத்திரி தரப்பினார்க்கிடையேயான கடும் முரண்பாடுகள் பெரும்பான்மை மக்கள் மத்தியில் இந்த அரசை செல்வாக்கிழக்க வழிகோலியது.

செல்வாக்கை இழந்து கொண்டிருந்த அரசு தேர்தல்களை தவிர்க்குமுகமாகவும், அத்தோடு மாகாணசபை முறைமையை இல்லாதொழிக்கவேண்டும் என்று தொடர்ச்சியாக மறைமுகமாக செயற்பட்டுவரும் சக்திகளும் இணைந்து 2017 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20ம் திகதி மாகாண சபை திருத்த ச ட்டம் ஒன்றை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றினார்கள். இதற்கு கூட்டமைப்பு முழுமையான ஆதரவை வழங்கியது. இதனை நடைமுறைப்படுத்த அவசியமான எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தில் அனைத்து உறுப்பினர்களாலும் நிராகரிக்கப்பட்டதுடன் அனைத்து மாகாணசபை தேர்தல்களும் கிடப்பில் போடப்பட் டது.

**மாகாண சபைகள் தொடர்பாக தற்போது என்ன நடக்கின்றது? என்ன செய்யப்படல் வேண்டும்.?**

மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படவேண்டுமாயின் முதலில் செய்யப்பட வேண்டிய விடயம் கூட்டமைப்பின் ஆதரவுடன் 2017இல் கொண்டுவரப்பட்ட தேர்தல் திருத்த சட்டதிற்கு, முன்பிருந்த முறைப்படி தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்கின்ற புதிய திருத்த சட்டம் ஒன்றை பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும். இது தொடர்பான தனிநபர் பிரேரணை ஒன்று பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் மார்ச் மாதம் 23ம் திகதி கொண்டுவரப்பட்டு ஏப்ரல் 25ம் திகதி முதல் வாசிப்பு முடிவடைந்து வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இது ஒரு வரவேற்கத்தக்க முன்னேற்றம்

பாராளுமன்றத்தில் ஒரு சட்ட மூலம் நிறைவேறவேண்டுமாயின் அங்கு பெரும்பான்மையான உறுப்பினர்களின் - 113 உறுப்பினர்களின்- ஆதரவை பெற வேண்டும் என்பது தெரிந்ததே. சில தரப்புகள் கூறுவது போல இந்த பிரேரணை மக்களின் அவதானத்தை திசைதிருப்பவும், நாங்களும் ஏதோ செய்கின்றோம் என்கின்ற பிரமையை தோற்றுவிக்கவும் பத்தாம் பசலித்தனமாக சுமந்திரனால் கொண்டுவரப்பட்டது என்று கூறுவதில் உண்மை இருக்காது. இதனை எப்படி சாத்தியமாக்குவது என்கின்ற வியூகங்களை வகுத்துக்கொண்டுதான் இந்த பிரேரணை நகர்த்தப்பட்டிருக்கும் என்பதுதான் சரியாக இருக்கும். எதிர்வரும் சில சில வாரங்களில் முக்கியமாக அவதானிக்கப்பட வேண்டிய விடயம் இதுவாகும்.

2023 மே மாதம் 15ம் திகதி இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதி ரணில் பேசியபோது அனைத்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் 13வது திருத்தம் அமுல்படுத்தப்படல் வேண்டும் எனவும், அதற்கான மாகாண சபை தேர்தல்களை காலதாமதமின்றி நடத்த வேண்டும் எனவும் கோரிக்கையை முன்வைத்தனர். இதுவும் ஒரு வரவேற்கத்தக்க முன்னேற்றம். அபிவிருத்தி பெரிய பொருளாதார திட்டங்கள் என்று திசை திருப்பும் முயற்சிகளுக்கு இடம் கொடுக்காமல் மாகாண அரசு தேர்தல்களுக்காக அனைவரும் ஒருமித்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைக்கு பலம் சேர்க்க வேண்டும்.

கடந்த மே மாதம் புலம்பெயர் தமிழர்கள் “இலங்கை வாழ் தமிழர் நலன்விரும்பிகள் அமைப்பு” என்கின்ற அமைப்பினூடாக வடக்குகிழக்கில் மாகாண சபைகளை இயங்கவைப்பதன் மூலம் புலம்பெயர் தமிழர்கள் பெருமளவில் தாயகத்தில் முதலீடுகளை செய்யமுடியும் என்றும் எனவே காலதாமதமின்றி வடக்கு கிழக்கு மாகாண சபை தேர்தல்களை நடாத்தும் படியும் கோரி வருகிறார்கள்.

மாகாணசபை தேர்தல்களையும் உள்ளூராட்சி தேர்தல்களையும் காலவரையின்றி ஒத்திப்போட்டிருப்பது ஜனநாயக விரோதமானது, அடிப்படை உரிமைகளையும் அரசியல் யாப்பையும் மீறுவதானது என்கின்ற அடிப்படையிலும் சிறிலங்கா ஜனநாயக மயப்படுத்தப்படுவதற்கு தேர்தல்கள் இன்றியமையாதது என்கின்ற அடிப்படையிலும் சிறிலங்காவில் ஜனநாயகத்தை விரும்பும் அனைத்து சமூகத்தினருடனும் இணைந்து காலதாமதமின்றி மாகாண சபை தேர்தல்களை தமிழ் தரப்பினர் கோர வேண்டும ●

# அரை நூற்றாண்டுக்கும் மேலாக ஒரே பத்திரிகையின் பிராந்திய செய்தியாளராக பணியாற்றும் வடமராட்சி ‘தில்லை’

**- வீரகத்தி தனபாலசிங்கம்**

பிராந்திய செய்தியாளராக ஒரே பத்திரிகைக்கு அரைநூற்றாண்டுக்கும் அதிகமான காலமாக பணியாற்றியிருக்கக்கூடியவர்கள் என்று எமது ஊடக சமூகத்தில் ஒரு சிலரையே குறிப்பிடமுடியும். அவர்களில் ஒருவர் புலோலி சின்னத்துரை தில்லைநாதன்.

அத்தகைய நீண்டகால அனுபவமுடைய பிராந்திய செய்தியாளர் என்று இன்று அடையாளப்படுத்தக்கூடிய ஒருவர் அவராக மாத்திரமே இருக்கவும் கூடும். தொடர்ந்து துடிப்புடன் பணியாற்றிவரும் அவர் இன்று தனது 73 வது அகவையில் காலடி வைக்கிறார். அவரை ஆரோக்கியத்துடன் நீடூழி வாழ்ந்து ஊடகத்துறைக்கு மேலும் பங்களிப்பைச் செய்ய வாழ்த்துவோம்.

வடமராட்சியில் எந்த கிராமத்துக்கும் சென்று “றிப்போட்டரை” சந்திக்கவேண்டும் என்று எவரிடமும் கேட்டால் அவர்கள் எந்த யோசனையும் இன்றி உடனே தில்லைநாதனின் வீட்டு விலாசத்தை தான் சொல்வார்கள். அவருடைய வீடு கூட “றிப்போட்டர்” வீடு என்றே மக்களால் அழைக்கப்படுகிறது.

நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக எனது நெருங்கிய நண்பராக விளங்கும் அவரை முழுப் பெயர் கொண்டு அழைப்பது எனக்கு அசௌகரியமாக இருக்கிறது.

தில்லை வடமராட்சியில் மாத்திரமல்ல யாழ்ப்பாணக் குடாநாட்டில் பரவலாக நன்கு அறியப்பட்ட மூத்த செய்தியாளர். நீண்டகால பத்திரிகைத்துறைப் பணி காரணமாக அவர் நாட்டின் ஏனைய பாகங்களிலும் உள்ள தமிழ்பேசும் ஊடகவியலாளர்கள் மத்தியிலும் கூட பிரபல்யமானவராக விளங்குகிறார். அவர் மக்களால்



நேசிக்கப்படும் ஒரு செய்தியாளர். மக்களுடனான அவரின் அன்னியோன்யமான ஊடாட்டம் ஊடகத் துறையில் இருப்பவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

தில்லை என்னுடன் தினமும் தொலைபேசியில் தொடர்புகொள்வார். தனிப்பட்ட விடயங்களை அவர் பேசுவது குறைவு. பத்திரிகைத்துறை பற்றியே அதிக நேரம் பேசுவார். அந்த துறையில் அரை நூற்றாண்டுக்கும் மேலாக பணியாற்றி யும் கூட இந்த மனிதனுக்கு இன்னமும் அலுக்கவில்லையா என்று எண்ணத் தோன்றும்.

நான் வடமராட்சியில் எனது ஊருக்கு செல்லும் சந்தர்ப்பங்களில் அனேகமாக தினமும் அன்றைய பத்திரிகைகள் சிலவற்றை எனக்காக வாங்கிக்கொண்டு வந்து தருவதை வழக்கமாகக் கொண்டிருக்கும் தில்லை “அந்தப் பத்திரிகையில் இந்தச் செய்தி இவ்வாறு வந்திருக்கிறது, இந்தப் பத்திரிகையில் அந்தச் செய்து அவ்வாறு வந்திருக்கிறது” என்றுதான் பேச்சைத் தொடங்குவார். தனது வாழ்வுடன் பத்திரிகைத்துறையை வரித்துக்கொண்டவர் தில்லை.

கண்டியில் இருந்து வெளியான “செய்தி” என்ற பத்திரிகையின் யாழ்ப்பாண செய்தியாளராக 1968 ஆம் ஆண்டில் இணைந்து கொண்டதன் மூலம் தில்லையின் பத்திரிகைத்துறை வாழ்வு தொடங்கியது. காலஞ்சென்ற பேராசிரியர் சோ.சந்திரசேகரத்தின் மாமனாரான வர்த்தகப் பிரமுகர் நாகலிங்கத்தினால் வெளியிடப்பட்ட அந்த பத்திரிகையின் ஆசிரியராக கே.ஜீ.மகாதேவா இருந்தார். அவர் பிறகு யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியான “ஈழநாடு” தினசரியின் செய்தி ஆசிரியராக இணைந்து நீண்டகாலம் பணியாற்றினார். அந்த இளம் வயதில் ‘செய்தி” பத்திரிகை நடத்திய கட்டுரைப் போட்டியொன்றிலும் தில்லைக்கு முதல் பரிசு கிடைத்தது.

பிறகு அவர் அடுத்த வருடமே ஈழநாட்டின் செய்தியாளராக இணைந்துகொண்டார். நான்கு வருடங்கள் அந்த பத்திரிகைக்காக பணியாற்றிய அவர் 1972 ஆம் ஆண்டில் வீரகேசரியின் புலோலி செய்தியாளரானார்.

தில்லையின் பத்திரிகைத்துறை ஈடுபாடு மற்றும் ஆற்றலை நன்கு தெரிந்து கொண்ட முன்னாள் நீதிபதி சுந்தரலிங்கம் தேசிய தமிழ்ப் பத்திரிகையொன்றில் அவரை இணைத்தால் திறமை மேலும் வெளிப்படுவதற்கு வாய்ப்பு அதிகம் என்று கருதி வீரகேசரியின் அன்றைய நிருவாக ஆசிரியர் கே. சிவப்பிரகாசத்திடம் சிபாரிசு செய்தார். வீரகேசரியின் புலோலி செய்தியாளராக நியமனம் பெற்ற பிறகு தில்லை திரும்பிப் பார்க்கவே இல்லை. இன்று வரை வீரகேசரியின் வடமராட்சி செய்தியாளராக சிறப்பாக பணியாற்றிவருகிறார். இன்று இருக்கக்கூடிய பிராந்திய பத்திரிகையாளர்கள் மத்தியில் வீரகேசரியின் பல தலைமுறை பிரதம ஆசிரியர்கள் மற்றும் செய்தி ஆசிரியர்களின் காலப்பகுதிகளில் பணியாற்றிய

(10ஆம் பக்கம் பார்க்க)

# ரஷ்ய அதிபர் புடினின் நெருங்கிய...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

**செர்கேய் லாவ்ரோஃப், வெளியுறவுத்துறை அமைச்சர்**

கடந்த 19 ஆண்டுகளாக, ரஷ்யாவின் மூத்த ராஜதந்திரியாக இருந்துள்ளார். முடிவெடுப்பதில் அவருக்குப் பெரிய பங்கு இல்லை எனக் கருதப்பட்டாலும்கூட, ரஷ்யாவின் தரப்பு நியாயத்தை உலகுக்கு முன்வைப்பதில் இவர் பங்காற்றியுள்ளார்.

விளாதிமிர் புடின் தனது கடந்த கால நட்புகளைப் பெரிதும் நம்பியிருக்கிறார் என்பதற்கு, 73 வயதான செர்கேய் லாவ்ரோஃப் மிகப்பெரிய சான்று.

ரஷ்யாவின் படையெடுப்பு தொடங்கிய சில நாட்களுக்குப் பிறகு, அந்த முடிவைத் தற்காத்து அவர் பேசிய போது, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பெரும்பகுதி வெளிநடப்பு செய்தது. ஆனால், அவர் அதைப் பொருட்படுத்திவே இல்லை.

ஆரம்பத்திலிருந்தே புடினின் விசுவாசியாக இருந்தாலும், உக்ரேன் விவகாரத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளில் அவருக்கு எந்தவொரு பங்கும் இருப்பதாகக் கருதப்படவில்லை.

ஆப்பிரிக்கா, தென்னமெரிக்கா மற்றும் பிற இடங்களில் ரஷ்யாவுக்கு ஆதரவைத் திரட்டி, தனது நாட்டை ஒரு காலனித்துவ நாடாக ஊக்குவிப்பதே அவரது பணி.

உக்ரேனை ஒரு "நாஜி ஆட்சி" என்று சித்தரிக்கும் முயற்சியில் அவர் ரஷ்யாவின் போருக்கான சொல்லாட்சியை உச்சகட்டத்திற்குக் கொண்டு சென்றார். உக்ரேனின் அதிபர் யூதர் என்பதெல்லாம் இங்கு ஒரு பொருட்டே இல்லை என்றுகூட அவர் வாதிட்டார். "நான் சொல்வது தவறாகக்கூட இருக்கலாம். ஆனால் ஹிட்லருக்கு கூட யூத ரத்தம் இருந்தது," என்றுகூட அவர் வாதிட்டார்.

**வாலென்டினா மாட்வியென்கோ, கூட்டமைப்பு கவுன்சிலின் தலைவர்**

வாலென்டினா மாட்வியென்கோ, கூட்டமைப்பு கவுன்சிலின் தலைவர். புடினுடைய பரிவாரங்களில் அரிதாக ஒரு பெண்ணின் முகம். இவர் மேல்சபையின் வாக்களிப்பை மேற்பார்வையிட்டவர். வெளிநாட்டில் ரஷ்ய படைகளை நிலைநிறுத்துவதை உறுதி செய்து, படையெடுப்பிற்கு வழி வகுத்தவர்.

வாலென்டினா மாட்வியென்கோ, செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கை சேர்ந்த மற்றொரு புடின் விசுவாசி. இவர் 2014இல் கிரைமியாவை இணைப்பதற்கு உதவினார்.

ஆனால், அவர் முதன்மையான முடிவுகளை எடுப்பவராகக் கருதப்படவில்லை.

**விக்டோர் ஸோலோடாவ், தேசிய காவல்படையின் தலைவர்**

விக்ட ஸோலோடாவ், தேசிய காவல்படையின் தலைவர். அதிபரின் முன்னாள் மெய்க்காப்பாளரான இவர், இப்போது ரஷ்யாவின் தேசிய காவல்படையான ரோஸ்க்வார்டியாவை வழிநடத்துகிறார். இது 2016ஆம் ஆண்டு அதிபர் புடினால் உருவாக்கப்பட்ட ரோமானிய பேரரசை போன்ற பிரிட்டோரியன் காவலர்கள் பாணியில் அமைக்கப்பட்ட ஒரு தனிப்பட்ட ராணுவம்.

அதை உருவாக்குவதற்கு முன்பாக, அதற்கான தனது சொந்த பாதுகாப்புக் காவலரைத் தேர்ந்தெடுப்பதன் மூலம், அவர் அந்தப் படையின் விசுவாசத்தை உறுதி செய்தார். மேலும் விக்டோர் ஸோலோடாவ் அந்தப் படையின் எண்ணிக்கையை 400,000 ஆக உயர்த்தினார்.

அவருக்கு ராணுவப் பின்னணி இல்லையென்றாலும், உக்ரேனின் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளைக் கட்டுப்படுத்த தேசிய காவல் படைக்குப் பரந்த அளவிலான பணிகள் வழங்கப்பட்டுள்ளன. அதோடு, அதில் அவர் பெரும் இழப்பைச் சந்தித்ததாகவும் கூறப்படுகிறது.

வாக்னர் குழுவின் தலைவர் ப்ரிகோஜின் ஏற்படுத்திய நெருக்கடி எப்படி முடியும் என்பதை முடிவு செய்வதில், ரஷ்யாவின் பாதுகாப்புப் படைகள் மற்றும் குறிப்பாக "தேசிய காவல் படை" முக்கியப் பங்கு வகிக்கும் என்று பிரிட்டனின் உளவுத்துறை கூறியது.

**புடின் வேறு யார் சொல்வதையெல்லாம் கேட்பார்?**

பிரதமர் மிகைல் மிஷூஸ்டினுக்கு பொருளாதாரத்தை மீட்கும் நம்ப முடியாத அளவுக்குப் பெரிய பணி உள்ளது.

மாஸ்கோ மேயர் செர்கேய் சோபியானின், ரோஸ்நேஃப்ட் மாகாண எண்ணெய் நிறுவனத் தலைவர் இகோர் செச்சின் ஆகியோரும் அதிபருக்கு நெருக்கமானவர்கள் என்று அரசியல் ஆய்வாளர் யெவ்கெனி மின்சென்கோ கூறுகிறார்.

அதிபரின் குழந்தைப்பருவ நண்பர்களாக இருந்த கோடீஸ்வர சகோதரர்கள் போரிஸ் மற்றும் ஆர்கடி ரோட்டன்பெர்க் ஆகியோர் நீண்டகாலமாக நெருங்கிய நட்புவட்டத்தில் உள்ளனர். கடந்த 2020ஆம் ஆண்டில், ஃபோர்ப்ஸ் பத்திரிகை அவர்களை ரஷ்யாவின் பணக்கார குடும்பமாக அறிவித்தது. ●

# அரை நூற்றாண்டுக்கும் மேலாக ஒரே....

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

செழுமையான அனுபவத்தைக் கொண்டவர் என்று தில்லையைத் தான் கூறமுடியும் என்று நம்புகிறேன்.

புலோலி செய்தியாளராக மாத்திரமல்ல, உள்நாட்டுப் போர் தீவிரமடைந்த காலகட்டத்தில் வீரகேசரியின் யாழ்ப்பாணச் செய்தியாளராகவும் தில்லை பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் பணியாற்றினார்.

தில்லையின் செய்தித் தொகுப்பு ஆற்றலுக்கு உதாரணங்களைக் கூறுவது என்பது அவரின் அனுபவத்தையும் ஆற்றலையும் நிந்தனை செய்வதாகக்கூட அமையலாம். என்றாலும், 1970 களின் பிற்பகுதியில் பொலிகண்டி கமலம் கொலை வழக்கு, செம்மணி கிருசாந்தி குமாரசாமி கொலை வழக்கு விசாரணைகள் பற்றிய செய்தி அறிக்கைகளை வீரகேசரியில் வாசகர்கள் தவறவிடாமல் வாசித்ததற்கு தில்லையின் கைவண்ணம் முக்கிய காரணம் என்பதை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். அந்த காலப் பகுதியில் நான் வீரகேசரி பணியாற்றியவன் என்பதால் அது தொடர்பில் நேரடி அனுபவம் எனக்கு இருக்கிறது.

பத்திரிகையாளர்களின் கூட்டு நலன்களிலும் தில்லை கடுமையான அக்கறை கொண்டவர். பிராந்திய செய்தியாளர்களை வீரகேசரி ஆசிரியர்கள் அவ்வப்போது அழைத்து அவர்கள் பணியாற்றவேண்டிய முறை குறித்து விளக்கமளிப்பதுண்டு. சிவப்பிரகாசம் பிரதம ஆசிரியராக இருந்த காலப்பகுதியில் செய்தியாளர்கள் சந்திப்பு அடிக்கடி இடம்பெற்றதை நான் அறிவேன்.

அந்த சந்திப்புகளில் எல்லாம் வேதனம், கடமைச் சூழ்நிலை, போக்குவரத்து பிரச்சினை உட்பட பிராந்திய பத்திரிகையாளர்கள் எதிர்நோக்கிய பல்வேறு நெருக்கடிகளை ஆசிரியரின் கவனத்துக்கு கொண்டவந்து அவற்றுக்கு நிவாரணம் தேடுவதில் அக்கறை காட்டியவர்களில் தில்லை முக்கியமானவர். ஊடகவியலாளர்களின் பல்வேறு அமைப்புக்களில் அவர் அங்கம் வகித்துவருகிறார். அண்மையில் வடமராட்சி செய்தியாளர்கள் சங்கத்தின் தாபக தலைவராகவும் அவர் தெரிவுசெய்யப்பட்டார்.

தில்லை போன்ற மிகவும் நீண்டகால பிராந்திய செய்தியாளர்களின் அனுபவங்கள் இன்றைய இளம் தலைமுறை ஊடகவியலாளர்களுக்கு பல்வேறு போதனைகளை வழங்கக்கூடிய வையாகும். அவர் தனது அரை நூற்றாண்டு கால பத்திரிகைத்துறை அனுபவங்களை ஒரு நூலாக எழுதவேண்டும் என்பது அவரது பிறந்த தினத்தில் நான் முன்வைக்கும் கோரிக்கையாகும்.

அதேவேளை, தனது வாழ்நாளை பத்திரிகைத்துறைக்கு அர்ப்பணித்த தில்லைக்கு இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் பத்திரிகை ஆசிரியர்கள் சங்கமும் இணைந்து வருடாந்தம் நடத்திவருகின்ற பத்திரிகைத்துறைச் சாதனை விருது நிகழ்வில் அடுத்த தடவை வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்வது அவரின் அர்ப்பணிப்புடனான பத்திரிகைத்துறைச் சேவைக்கு சேவைக்கு வழங்கும் உயரிய கௌரவமாக அமையும். ●






# கட்டுத்துவக்கு வெடித்து 14 வயது சிறுவன் பலி!

## வாகரை பொலிஸ் பிரிவில் சம்பவம்

மட்டக்களப்பு, ஜூன் 29

**வாகரை பொலிஸ்பிரிவிற்குட்பட்ட கட்டுமுறிவு பிரதேசத்தில் கட்டுத்துவக்கு வெடித்ததில் சிறுவன் ஒருவன் பலியான சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.**

சின்னத்தட்டுமுனை வாகரை பிரதேசத்தைச் சேர்ந்த நவரெட்ணராசா கிதுசன் (வயது-14) என்பவரே பலியானார்.

சம்பவ தினத்தன்று உறவினர்களுடன் கட்டுமுறிவு காட்டு பிரதேசத்திற்கு மிருக வேட்டைக்குச் சென்றுகொண்டிருக்கும் போது காட்டுப் பற்றையில் கையிலிருந்த கட்டுத்துவக்கு சிக்குண்டு வெடித்ததில் குறித்த சிறுவன் சம்ப இடத்திலேயே பலியானார் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாணைகளின் போது தெரியவந்தது.

வாழைச்சேனை நீதிமன்ற நீதிவானின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற கோரளைப்பற்று பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி வடிவேல் ரமேஸ்சானந்தன் சடலத்தை பார்வையிட்ட பின்னர் பிரதே பரிசோதனைக்காக வாழைச்சேனை வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைக்க உத்தரவிட்டார்.

மேலதிக விசாரணைகளை வாகரை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)



வளத்தாப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கர உற்சவமானது கடந்த 17 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் ஆலய பிரதம குரு கர்னிஸ்வர சர்மா தலைமையில் நடைபெற்று நேற்று முன்தினம் கங்கை தீர்த்தத்துடன் நிறைவுற்றது. (அ)

# சம்மாந்துறை கோரக்கோயில் மாரியம்மன் பாற்குடப் பவனி

காரைதீவு, ஜூன் 29

வரலாற்று பிரசித்தி பெற்ற சம்மாந்துறை தமிழ்ப்பிரிவு கோரக்கோயில் ஸ்ரீ அகோர மாரியம்மன் ஆலய வருடாந்த தீமிதிப்பு சடங்கின் ஓரங்கமாக பாற்குடபவனி நேற்றுமுன் தினம் நடைபெற்றது.

ஆலயத்தின் தீமிதிப்பு சடங்கு கடந்த வெள்ளிக்கிழமை கடல் நீர் எடுத்து வந்து திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து ஒன்பது நாட்கள் திருவிழாக்கள் இடம்பெற்று பத்தாம் நாள் ஜூலை மாதம் மூன்றாம் திகதி தீ மிதிப்பு சடங்கு நடைபெற இருக்கிறது.

ஆலய பிரதம பூசகர் முருகேசு ஜெகநாதன் தலைமையில் சடங்குகள் இடம் பெற்று வருகின்றன.

பாற்குடபவனி காலை 7 மணியளவில் சம்மாந்துறை பத்திரகாளியம்மாள் ஆலயத்தில் இருந்து ஆரம்பித்து அகோர மாரியம்மன் ஆலயத்தை வந்த டைந்தது.

ஜூலை மூன்றாம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணியளவில் மஞ்சள் குளித்து தீமிதிப்பு சடங்கு இடம்பெறும். (அ)



# மின்சாரம் தாக்கி மீனவர் மரணம்!

## ஓட்டமாவடியில் சம்பவம்

மட்டக்களப்பு, ஜூன் 29

ஓட்டமாவடி மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட காவத்தமுனையில் மீனவர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

காவத்தமுனையைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான முத்துவான் அன்சார் (வயது-54) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை வழக்கம்போல் ஓட்டமாவடி ஆற்றிலுள்ள ஆமை ஓடை குடாவில் மீன்பிடிக்கச் சென்றவர் வீடு திரும்பாததால் அவரை தேடும் பணியில் உறவினர்கள் ஈடுபட்டனர். அப்போது அவர் இறால் பண்ணைக்கு அருகாமையிலுள்ள நீரோடையில் உயிரிழந்த நிலையில் சடலமாக கண்டறியப்பட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

கவத்தமுனை பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள தனியாருக்கு சொந்தமான இறால் பண்ணையின் பாதுகாப்பு கருதி வேலிகளுக்கு மின்சாரம் இணைக்கப் பட்டுள்ளது.

குறித்த மின்சார இணைப்பானது இறால் பண்ணைக்கு அப்பாலுள்ள நீரோடைக்கு குறுக்காவும் இணைக்கப்பட்டுள்ளது.

இவ் ஓடையில் பொதுமக்கள் தங்களது நாளாந்த உணவுக்காக மீன் பிடிப்பது வழக்கமாகும்.

விடயம் தெரியாத நபர் இச் சட்டவிரோத மின்சார இணைப்பில் அகப்பட்டு உயிரிழந்தாரென பொதுமக்கள் கவலை தெரிவித்தனர். (அ)

# மட்டக்களப்பின் அபிவிருத்தி குறித்து ஒருங்கிணைப்புக் குழுவில் ஆராய்வு



மட்டக்களப்பு, ஜூன் 29

மட்டக்களப்பு மாவட்டத்தின் மாதாந்த ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் கிழக்கு மாகாண ஆளுநரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான செந்தில் தொண்டமான் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினரும்,அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், இரா ஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்களான இராசமாணிக்கம் சாணக்கியன் மற்றும் கோவிந்தன் கருணாகரன் மற்றும் பல அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதன் போது மட்டகளப்பு மாவட்டத்தில் நிலுவையில் உள்ள அனைத்து பிரச்னைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறைசார்ந்த அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டதுடன், மாவட்டத்தின் தற்போதைய சுய நிலைத்தன்மையை மேம்படுத்த புதிய வளர்ச்சித் திட்டங்களை வகுப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

(அ)

# மயிலம்பாவெளியில் மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கல் ஆரம்பம்

மட்டக்களப்பு, ஜூன் 29

நீண்ட காலமாக குடிதண்ணீர் பிரச்னைக்கு தீர்வு கோரிய ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மயிலம்பாவெளி பகுதியில் குடிதண்ணீர் இணைப்பு வேலைத் திட்டம் ஆரம்பித்துவைக்கப் பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று முன் தினம் இடம்பெற்றது.

நீர்வழங்கல் அமைச்சர் ஜீவன் தொண்டமானிடம் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் இந்த திட்டம் நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளது.

மயிலம்பாவெளி பகுதியில் குடிதண்ணீர் இணைப்பு இதுவரை கிடைக்கப்பெறாத பகுதிகளுக்கான சுமார் 2 கிலோமீற்றர் நீள குடிதண்ணீர் வழங்கும் நோக்கத்தின் அடிப்படையில் இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் உரையாற்றுகையில்-

நமது மாவட்டத்தில் மக்கள் நீண்ட காலமாக எதிர்நோக்குகின்ற பிரச்னைகளில் குடிதண்ணீர்ப் பிரச்னையும் ஒன்று. இப்பொழுது மாவட்டத்திலே குடிதண்ணீர் இணைப்பு இல்லாத இடங்களுக்கும் குடிதண்ணீரை வழங்குவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம்.

இந்த வருடம் அல்லது வருகின்ற வருடத்துக்குள் மாவட்டத்தில் குடிதண்ணீர் இணைப்பு வழங்கப்படாமல் இருக்கின்ற 55 பகுதிகளில் குடிதண்ணீர் இணைப்பை வழங்கவேண்டும்.

திராய்மடு தொடக்கம் புன்னைக்குடா வரையிலான பகுதிகளுக்கான குடிதண்ணீர் இணைப்பு வழங்குவதற்கான செயல்திட்டம் பொருளாதார பிரச்னை போன்ற பல காரணங்களினால் பிற்போடப்பட்டிருந்தது.

நமது மாவட்ட நீர்ப்பாசன முகாமையாளர் இத்திட்டத்தினை அமைச்சு மட்டத்தில் பேசி விரைவாக கொண்டு வரவேண்டும் என கூறியிருந்தார்.

இதற்கு அமைவாக ஜீவன் தொண்டமானோடு இத்திட்டத்தினை விரைவாக ஆரம்பிக்கவேண்டும் என நான் கூறிய இந்த வேலை திட்டத்தை விரைவாக ஆரம்பிப்பதற்கு அவர் உதவி புரிந்திருக்கின்றார்- என்றார். (அ)

# கிளர்ச்சியை ரஷ்யா பாதி வழியில் பூச்சியைப் போல நசுக்கியிருக்கும்!

## வாக்னர் படைத் தலைவரை கொல்லவேண்டாம் என்று நானே புடினைத் தடுத்தேன் என்கிறார் பெலாரஸ் அதிபர்



மொஸ்கோ, ஜூன் 29

**ரஷ்யாவுக்கும் வாக்னர் துணைப்படைக்கும் இடைய ஏற்பட்ட பதற்றத்தைத் தணிப்பதில் முக்கிய பங்காற்றினார் எனத் தெரிவித்திருக்கின்றார் பெலாரஸ் நாட்டின் அதிபர் ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோ. ப்ரிகோஜின் மற்றும் புடின் ஆகியோருடன் நடத்திய தொலைபேசி உரையாடல்களில் தான் கூறிய விடயங்களை அவர் காணொளி உரை ஒன்றில் வெளியிட்டிருக்கிறார்.**

மொஸ்கோ நோக்கி முன்னேறி வந்த வாக்னர் கிளர்ச்சிப் படைகளைப் பாதி வழியிலேயே "பூச்சிகளை நசிப்பது போன்று ரஷ்யா அழித்துத் துடைத்துவிடும்" என ப்ரிகோஜினுக்கு எச்சரிக்கை விடுத்தார் என்றும் -

அதேசமயம், வாக்னர் படைத் தலைவரைக் கொல்ல வேண்டாம் என்று அதிபர் புடினிடம் உறுதிமொழி பெற்றார் என்ற தகவலையும் -

ரெலிகிராம் சனலில் வெளியிடப்பட்ட ஒரு வீடியோ பதிவில் அலெக்சாண்டர் லுகாஷென்கோ தெரிவித்திருக்கிறார்

"அவரை நாங்கள் கொல்ல முடியும். அது ஒரு பிரச்னையே இல்லை. முதல் எடுப்பிலேயோ அல்லது இரண்டாவது முறையிலோ அவரைக் கொன்றிருக்க முடியும். ஆனால் அதனைச் செய்ய வேண்டாம் "-இவ்வாறு புடினிடம் பேசிய போது தான் கேட்டுக்கொண்டதாக அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

பெலாரஸ் அதிபர் அலெக்சாண்டர் லுகாஷென்கோ, ரஷ்ய அதிபர் புடினுக்கு மிக நெருக்கமான நண்பர் ஆவார்.

ரஷ்யா அண்மையில் தனது தந்திரோபாய அணு ஆயுதங்கள் சிலவற்றைப் பெலாரஸ் நாட்டுக்கு நகர்த்தி இருந்தது.

கடந்த வார இறுதியில் உலகைப் பரபரப்புக்குள்ளாக்கிய திடீர் ஆயுதக் கிளர்ச்சியைக் கைவிட்டு ரஷ்யாவிலிருந்து வெளியேற இணங்கிய ப்ரிகோஜின், பெலாரஸ் நாட்டை சென்றடைந்துள்ளார் என்பதை அந் நாட்டின் அதிபர் தனது செய்தியில் உறுதிப்படுத்தியுள்ளார். ஆனால் ப்ரிகோஜின் எங்கே இருக்கிறார் என்பதை சுயாதீனத் தரப்புகள் எதுவும் இன்னமும் உறுதி செய்யவில்லை.

அதேவேளை, வாக்னர் தலைவர் உண்மையில் எங்கே உள்ளார் என்பது மர்மமாக இருப்பதாக மேற்கு நாட்டுப் பாதுகாப்புச் சேவைகளும் தெரிவிக்கின்றன.

கடைசியாகத் தென்பகுதி நகரம் ஒன்றில் இருந்து அவர் காரில் புறப்பட்டுச் செல்வதையும் அங்கு நின்ற மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் அவரை வழியனுப்பி வைப்பதையும் காட்டும் படங்கள் வெளியாகி இருந்தன. அதன்பிறகு அவர் எங்கே சென்றார் என்பது உறுதியாகத் தெரியவரவில்லை. புடின் எப்போதும் தனது எதிராளிகளைத் தீர்த்துக் கட்டுவதில் குறியாக இருப்பவர் என்பதால் ப்ரிகோஜினின் உயிருக்கு எந்த வேளையும் ஆபத்து உள்ளது என்று மேற்குலக உளவு நிபுணர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் ரெலிகிராம் சனலில் வெளியாகிய ப்ரிகோஜினின் செய்தி ஒன்றில், மொஸ்கோவை நோக்கித் தாங்கள் மேற்கொண்ட "நீதிக்கான பயணம்" அதிபர் புடினை அதிகாரத்தில் இருந்து அகற்றும் நோக்கம் கொண்டதல்ல என்று தெரிவித்திருந்தார்.

இதேவேளை -

வாக்னர் நடத்திய ஒரு நாள் கிளர்ச்சி மொஸ்கோவில் கிரெம்ளின் உயர் மட்டங்களில் பெரும் அதிர்ச்சியை உருவாக்கியிருக்கிறது. மொஸ்கோ ஆயுதங்களையும் பெருமளவு நிதியையும் அள்ளிக் கொடுத்து வளர்த்து உருவாக்கிய துணைப் படை கடைசியில் கிரெம்ளினுக்கு எதிராகத் திரும்பியமை புடினின் இரண்டு தசாப்த கால அதிகாரத்தில் ஏற்பட்ட முக்கியமான பலத்த அடி என்று அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

புடின் 2 நாள்களில் இரு தடவைகள் நாட்டுக்குத் தொலைக்காட்சியில் உரையாற்றியிருக்கிறார். கிளர்ச்சியைத் திட்டமிட்ட சக்திகளது நோக்கம் ரஷ்யாவை இரத்தத்தில் குளிக்க வைப்பது தான் என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார். இரத்தக் களரியைத் தவிர்ப்பதற்காகப் பின்வாங்கும் முடிவு செய்த வாக்னர் படை வீரர்களை "தேசபக்தர்கள்" எனப் புகழ்ந்து அவர்களுக்கு நன்றி கூறிய புடின் , விரும்பினால் அவர்கள் ரஷ்ய ராணுவத்தில் இணைந்து கொள்ளலாம். அல்லது பெலாரஸ் நாட்டுக்குச் செல்லலாம் என்று அறிவித்தார். ஏற்கனவே வழங்கிய வாக்குறுதிகளைத் தான் கடைப்பிடிப்பார் என்றும் உறுதி கூறினார். உள்நாட்டுப் போரைத் தடுத்து நிறுத்தியதற்காக அவர் ரஷ்யாவின் பாதுகாப்புச் சேவைகளுக்குப் பாராட்டைத் தெரிவித்தார்.

(அ)

# கோடை விடுமுறை காலப் பகுதியை குறைப்பது பற்றி ஆராயும் பிரான்ஸ்!

## மார்சேய் நகருக்குச் சென்ற மக்ரோன் அங்கு அறிவிப்பு

பாரிஸ், ஜூன் 29

பிரான்ஸில் கோடை விடுமுறைக் காலம் கிட்டத்தட்ட ஜூலை,ஓகஸ்ட் ஆகிய இரண்டு மாதங்களையும் முழுமையாக உள்ளடக்கியது. ஏனைய பல ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் பிரான்ஸில் மட்டும் தான் இவ்வாறு நீண்ட காலப்பகுதிக்கு பாடசாலைகள் மூடப்படுகின்றன. இது ஒரு மாற்றமுடியாத பாரம்பரியமாகத் தொடர்ந்து வருகிறது.

பாடசாலைக் கற்பித்தல் காலத்தையும் கோடை விடுமுறைக் காலத்தையும் அரசு மீள் பரிசீலனை செய்யவுள்ளது. அது தொடர்பாக விரைவில் பொது விவாதங்களைத் தொடக்கவுள்ளது என்று அதிபர் மக்ரோன் தகவல் வெளியிட்டுள்ளார்.

நீண்ட விடுமுறைக் காலம் கற்றலில் இழப்பை ஏற்படுத்துகிறது. எனவே ஓராண்டில் கற்பித்தல் காலம் எவ்வளவு என்பது தொடர்பாக விவாதம் ஒன்றைத் தொடக்குவதற்குக் கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது என்று அவர் அறிவித்திருக்கிறார்.

நாட்டிலே அதிகமாக வன் செயல்கள் தலையெடுத்துள்ள மார்சேய் நகரத்துக்கு விஜயம் செய்துள்ள அவர் அங்கு மாணவர் மத்தியில் கல்வியில் நிலவுகின்ற ஏற்றத்தாழ்வுகள் பற்றி அங்குள்ள கல்விச் சமூகத்தினருடன் கலந்துரையாடியிருக்கிறார்.



அச்சமயத்திலேயே கோடை விடுமுறைக் காலத்தைக் குறைக்கின்ற உத்தேசத் திட்டம் பற்றிய தகவலை அங்கு அவர் வெளியிட்டார்.

சிறுவர்களிடையே நீண்ட கோடை விடுமுறைக் காலம் கல்வியில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட வாய்ப்பளிக்கின்றது. சிலர் விடுமுறைக் காலத்தில் வீடுகளில் அல்லது பிரத்தியேக வழிமுறைகளில் கற்றலைத் தொடர்கிறார்கள். வசதி குறைந்த புறநகரங்களில் பிள்ளைகள் விடுமுறைக்காலம் முழுவதையும் விளையாட்டில் மட்டுமே கழிக்கிறார்கள்.

இரண்டு மாதங்கள் விடுமுறையைக் கழித்துவிட்டு செப்ரெம்பரில் அவர்கள் வகுப்புகளுக்குத் திரும்புகின்றனர். பின்னர் நான்கு, ஐந்து வாரங்களில் அடுத்த தவணை விடுமுறைக் காலம் தொடங்குகிறது. இந்த இடைப்பட்ட ஒருமாத காலப் பகுதிக்குள் மிகுந்த கற்றல் சுமையைச் சந்திக்க நேரிடுகிறது. கல்வியாண்டின் குறுகிய ஆரம்ப நாட்களில் ஆசிரியர்களும் மாணவர்களும் மிகக் கடுமையான வேலைச் சுமையை எதிர் கொள்ளவேண்டி ஏற்படுகிறது - என்பதை அதிபர் அங்கு சுட்டிக்காட்டினார்.

கல்விப்போதனைக் காலத்தில் மாற்றம் செய்கின்ற உத்தேசத் திட்டம் உடனடியாக அடுத்த கல்வி ஆண்டில் நடைமுறைக்கு வந்துவிடாது என்பதையும் மக்ரோன் அங்கு கூடியிருந்தோரிடம் நினைவுபடுத்தினார். அதேசமயம் பாடசாலைகளில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளைக் களைவதற்காக கல்லூரிகள் திறந்திருக்கும் நேரத்தைப் படிப்படியாகக் காலை எட்டு மணியில் இருந்து மாலை ஆறு மணி வரையாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மக்ரோன் தெரிவித்திருக்கிறார்.

(அ)

# கனடாவில் அமைச்சராகும் முதல் இலங்கைப் பெண்!

மொன்றியல், ஜூன் 29

கனடாவில் அரச உள்விவகாரங்களுக்கான துணை அமைச்சராக இலங்கை பெண் துஷாரா வில்லியம்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

கனேடிய பொதுச் சேவையில் பங்கேற்கும் இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த முதல் துணை அமைச்சர் வில்லியம்ஸ் என தெரியவருகின்றது.

கொழும்பில் பிறந்த துஷாரா வில்லியம்ஸ், தனது ஆரம்ப மற்றும் இடைநிலை கல்வியை கொழும்பு பெண்கள் கல்லூரியில் கற்றுள்ளார்.



இதன் பின்னர் 1991 இல் கனடாவுக்கு அவர் குடிபெயர்ந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் உள்ள கொள்கை ஆய்வுகள் நிறுவனத்தில் துஷாரா வில்லியம்ஸ் சிறிது காலம் பணியாற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# சீன உளவு பலூன் சுட்டு வீழ்த்தப்படும்!

## ஜப்பான் எச்சரிக்கை

ரோக்கியோ, ஜூன் 29

சீனாவின் புதிய உளவு பலூன் (வளிக்கூடு) நடவடிக்கைகள் ஜப்பான் மற்றும் தாய்வான் வான்பரப்பில் அவதானிக்கப் பட்டுள்ளன.

குறித்த பலூன்கள் தங்கள் எல்லையில் பறந்ததை ஜப்பான் உறுதி செய்துள்ளது.

அத்துடன் எதிர்காலத்தில் அவற்றை சுட்டு வீழ்த்த தயாராக இருப்பதாகவும் ஜப்பான் குறிப்பிட்டுள்ளது.

பிபிசி செய்தி சேவை வெளிப்படுத்தியுள்ள ஆதாரங்களுக்கு சீனா இதுவரையில் பதிலளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் சீனாவின் உளவு பலூன் அமெரிக்க கடற்கரையில் சுட்டு வீழ்த்தப்பட்டதால், அமெரிக்க-சீனா உறவில் பெரும் விரிசல் ஏற்பட்டது.

பின்னர் கடந்த ஜனவரி மாதத்தின் பிற்பகுதியில் அமெரிக்காவின் வடமேற்கு பகுதியில் காணப்பட்ட பலூன் வானிலை ஆய்வு போன்ற அறிவியல் ஆராய்ச்சிகளுக்குப் பயன்படுத்தப்பட்டதாக சீனா அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)




# நியூசிலாந்து மகளிரை வீழ்த்தியது இலங்கை!

காலி, ஜூன் 29

நியூசிலாந்துக்கு எதிராக இலங்கை மகளிர் அணி முதல் வெற்றியை ருசித்துள்ளது. அணித் தலைவி சமரி அத்தப்பத்துவின் சதத்தின் உதவியுடன் 9 விக்கெட்களால் இலங்கை வெற்றிபெற்றது.

காலியில் நடந்த இந்தப் போட்டி மழையால் 28 ஓவர்கள் கொண்ட போட்டியாக இது மட்டுப் படுத்தப்பட்டது.

நியூசிலாந்து நிர்ணயித்த 171 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை 27 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்று அபார வெற்றியீட்டியது.

அதிரடியாக துடுப்பெடுத்தாடிய சமரி அத்தபத்து 83 பந்துகளை எதிர்கொண்டு 10 பௌண்ட்ரிகள், 5 சிக்ஸர்கள் உட்பட ஆட்டம் இழக்காமல் 108 ஓட்டங்களை குவித்தார். 93ஆவது மகளிர் சர்வதேச ஒருநாள் போட்டியில் விளையாடிய சமரி அத்தபத்து பெற்ற 7ஆவது சதம் இதுவாகும்.

அவருக்கு பக்கபலமாக துடுப்பெடுத்தாடிய விஷ்மி குணரட்ன தனது 5ஆவது போட்டியில் முதலாவது அரைச் சதத்தைப் பெற்றார். மிகவும் நிதானத்துடன் துடுப்பெடுத்தாடிய விஷ்மி 74 பந்துகளில் 3 பௌண்ட்ரிகளுடன் 50 ஓட்டங்களைப் பெற்றார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 28 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் அசத்துவார் என எதிர்பார்க்கப் பட்ட சுசி பேட்ஸ் 28 ஓட்டங்களை மாத்திரம் பெற்று காவிஷா டில்ஹாரியினால் ஆட்டம் இழக்கச்செய் யப்பட்டார்.

அமேலியா கேர் 40 ஓட்டங்களைப் பெற்று இனோக்கா ரணவீரவின் பந்துவீச்சில் களம் விட்டு வெளியேறினார். சொபி டிவைன் (18), மெடி க்ரீன் (38) ஆகிய இருவரையும் இனோக்கா ரணவீர ரன் அவுட் ஆக்கியது விசேட அம்சமாகும்.

பந்துவீச்சில் காவிஷா டில்ஹாரி 26 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், சுகந்திகா குமாரி 28 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், இனோக்கா ரணவீர 41 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

## உலகக் கிண்ண தகுதி சுற்று:

# ஸ்கொட்லாந்து அணியை வெற்றிகொண்டது இலங்கை




ஸ்கொட்லாந்து அணியை 82 ஓட்டங்களால் வீழ்த்திய இலங்கை அணி உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றில் முழுமையான வெற்றியுடன் சுப்பர் 6 சுற்றுக்குள் நுழைந்தது.

தனது கடைசி தகுதிகாண் போட்டியில் துடுப்பாட்டத்தில் இலங்கை பெரியளவில் பிரகாசிக்காத போதிலும் பந்துவீச்சில் அசத்தி ஸ்கொட்லாந்துடனான போட்டியில் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 49.3 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றது.

திமுத் கருணாரட்ன (7), குசல் மெண்டிஸ் (1) ஆகிய இருவரும் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்க இலங்கையின் ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை.

எனினும், பதும் நிஷங்கவும் சதீர சமரவிக்ரமவும் 3ஆவது விக்கெட்டில் 55 ஓட்டங்களைப் பகிர்ந்து அணிக்கு உற்சாகம் ஊட்டினர். சதீர சமரவிக்ரம (26) ஆட்டம் இழந்ததைத் தொடர்ந்து பதும் நிஷங்க மேலும் 44 ஓட்டங்களை 4ஆவது விக்கெட்டில் சரித் அசலங்கவுடன் பகிர்ந்தார்.

பதும் நிஷங்க 10 பௌண்ட்ரிகளுடன் 75 ஓட்டங்களைப் பெற்றுஆட்டமிழந்தார்.

5ஆவது விக்கெட்டில் ஜோடி சேர்ந்த சரித் அசலங்கவும் தனஞ்சய டி சில்வாவும் 61 ஓட்டங்களைப் பகிர்ந்து 200 ஓட்டங்களைக் கடப்பதற்கு இலங்கைக்கு உதவினர்.

சரித் அசலங்க 4 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 63 ஓட்டங்களையும் தனஞ்சய டி சில்வா 23 ஓட்டங்களையும் பின்வரிசையில் வனிந்து ஹசரங்க 15 ஓட்டங்களையும் மஹீஷ் தீக்ஷன ஆட்டம் இழக்காமல் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

246 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து 29 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 163 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

ஆரம்ப வீரர் கிறிஸ்டோபர் மெக்ப்றைட் 29 ஓட்டங்களைப் பெற்றபோதிலும் ஏனைய முன்வரிசை வீரர்கள் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தனர்.

ஒரு கட்டத்தில் 22ஆவது ஓவரில் ஸ்கொட்லாந்தின் 8ஆவது விக்கெட் வீழ்த்தப்பட்டபோது அதன் மொத்த எண்ணிக்கை வெறும் 100 ஓட்டங்களாக இருந்தது.

ஆனால், கிறிஸ் க்ரீவ்ஸ், கிறிஸ் சோல் ஆகிய இருவரும் 9ஆவது விக்கெட்டில் 55 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை ஓரளவு கௌரவமான நிலையில் இட்டனர்.

கிறிஸ் க்ரீவ்ஸ் 41 பந்துகளில் 7 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 56 ஓட்டங்களையும் கிறிஸ் சோல் 17 ஓட்டங்களையும் பெற்றனர். அவர்களைவிட மார்க் வொட் 14 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் மஹீஷ் தீக்ஷன 3 விக்கெட்களையும் வனிந்து ஹசரங்க 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

## உலகக் கிண்ண தகுதி சுற்று:

# ஐக்கிய அரபு இராச்சியத்தை வீழ்த்தியது அயர்லாந்து அணி

புலவாயோ, ஜூன் 29

போல் ஸ்டேர்லிங் குவித்த அபார சதம் கைகொடுக்க ஐக்கிய அரபு இராச்சியத்தை 138 ஓட்டங்களால் வெற்றி கொண்டது அயர்லாந்து அணி.

நேற்று முன்தினம் நடந்த இந்தப் போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடியது அயர்லாந்து. முன்வரிசை வீரர்களின் அதிரடியால் 50 ஓவர்களில் 4 விக்கெட்களை மாத்திரம் இழந்து 349 ஓட்டங்களைக் குவித்தது.

அணியின், மொத்த எண்ணிக்கை 41 ஓட்டங்களாக இருந்தபோது ஆரம்ப வீரர் அண்டி மெக்ப்றைன் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

ஆனால், போல் ஸ்ரேர்லிங், அணித் தலைவர் அண்டி பெல்பேர்னி ஆகிய இருவரும் 2ஆவது விக்கெட்டில் 184 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை பலப்படுத்தினர்.

தொடர்ந்து ஹறி டெக்டருடன் மேலும் 57 ஓட்டங்களை 3ஆவது விக்கெட்டில் போல் ஸ்டேர்லிங் பகிர்ந்தார். 134 பந்துகளை எதிர்கொண்டு அதிரடியாக ஓட்டங்களைக் குவித்த போல் ஸ்டேர்லிங் 15 பௌண்ட்ரிகள், 8 சிக்ஸர்கள் அடங்கலாக 162 ஓட்டங்களைக் குவித்தார்.

அண்டி பெல்பேர்னி 5 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 66 ஓட்டங்களையும் ஹெறி டெக்டர் 33 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 57 ஓட்டங்களையும் பெற்றனர். லோக்கன் டக்கர் 19 ஓட்டங்களுடனும் ஜோர்ஜ் டொக்ரெல் 15 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காதிருந்தனர்.


சஞ்சித் ஷர்மா 46 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஐக்கிய அரபு இராச்சியம் 39 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் மொஹமத் வசீம் (45), சஞ்சித் சர்மா (44), பாசில் ஹமீத் (39) ஆகிய மூவரே 35க்கும் மேற்பட்ட ஓட்டங்களைப் பெற்றனர்.

மொஹமத் வசீமும் 18 ஓட்டங்களைப் பெற்ற ஆரியன்ஷ் ஷர்மாவும் 7.2 ஓவர்களில் 58 ஓட்டங்களைப் பகிர்ந்து நல்ல ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர். ஆனால், 51 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 6 விக்கெட்கள் சரிந்ததால் ஐக்கிய அரபு இராச்சியம் ஆட்டம் கண்டது (109 - 6 விக்.) (ஐ)




# அயர்லாந்து செல்கிறது இந்திய கிரிக்கெட் அணி

புதுடில்லி, ஜூன் 29

இந்திய அணி ஜூலையில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு சென்று 2 டெஸ்ட், 3 ஒருநாள், 5 இருபது -20 தொடர்களில் விளையாடுகின்றது. இந்தத் தொடர் ஓகஸ்ட் 13இல் முடிவடைகிறது. இதைத் தொடர்ந்து இந்திய அணி அயர்லாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்கிறது.

அயர்லாந்து அணியுடன் இந்தியா மூன்று 20 ஓவர் போட்டிகளில் விளையாடுகிறது. இந்திய அணியின் அயர்லாந்து பயணத்தை சர்வதேச கிரிக்கெட் சபை உறுதி செய்தது. ஓகஸ்ட் 18ஆம் திகதி முதல் இருபது - 20 தொடரும் 23ஆம் திகதி வரை இந்தத் தொடர் நடைபெறவுள்ளது. (ஐ)

# கடன் மறுசீரமைப்புக்கு சீனா உச்ச பங்களிப்பு!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 29

**சீனாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் கிவின் காண்ட் உடன் நடத்திய கலந்துரையாடலின்போது, இரு தரப்பு மற்றும் பொருளாதார தொடர்புகளை பலப்படுத்துவதுவதற்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.**

கம்பஹா மாவட்டச் செயலாளரின் நிர்வாக கட்டடத் தொகுதியான லக்சியனே மாளிகையை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி-

சீன நிதியமைச்சர் லீ கியூன் உடனான கலந்துரையாடலின் போது, நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நிலையான முன்னேற்றத்திற்கான திட்டம் குறித்து ஆராயப்பட்டது.



நெருக்கடி நிலையில் சீனா வழங்கிய ஒத்துழைப்புக்கு அமைச்சர் அலி சப்ரி இதன்போது நன்றி தெரிவித்தார்.

இந்த விஜயத்தின்போது, இலங்கையின் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக சீனாவினால் நியமிக்கப்பட்டுள்ள எச்சிம் வங்கியின் தலைவர் வூ புலின் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, கடன் மறுசீரமைப்பிற்கு உச்ச பங்களிப்பு அளிப்பதாக அவர்கள் அறிவித்துள்ளனர்-என்றார். (அ)

# தொட்டிலில் கழுத்து இறுகி 9 வயதுச் சிறுவன் மரணம்!

## நாவலப்பிட்டியில் சோகம்

கொழும்பு, ஜூன் 29

நாவலபிட்டி, மொன்றிகிறிஸ்ரோ தோட்டத்தில் தொட்டிலில் கழுத்து இறுகி 9 வயதுச் சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இத்துயர் சம்பவம் நேற்று முன் தினம் மதியம் இடம்பெற்றுள்ளது.

வீட்டிலிருந்த மற்றுமொரு சிறு குழந்தைக்காக சேலையில் கட்டப்பட்டிருந்த தொட்டிலில் குறித்த சிறுவன் விளையாடிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே, இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் நாவலப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# ரயில் சேவைகள் பாதிப்பு

கொழும்பு, ஜூன் 29

களனிவெளி ரயில் மார்க்கத்தில் ரயில் போக்குவரத்து சேவைகள் நேற்று பாதிக்கப்பட்டன.

நேற்று அதிகாலை 4.00 மணியளவில் தடம் புரண்ட ரயில் பெட்டிகளை தடமேற்றும் நடவடிக்கை நிறைவடைந்தபோதிலும், மார்க்கத்தின் பராமரிப்புப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், நேற்று காலை 07 ரயில் போக்குவரத்து சேவைகள் இரத்து செய்யப்பட்டன.

இதேவேளை, பயணிகளின் வசதிக்காக நாரஹேன்பிட்டி ரயில் நிலையம் வரை ரயில்களை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# விவசாயிகள் உரக் கொள்வனவு; வவுச்சர் செல்லுபடி காலம் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 29

சிறுபோகத்தில் உரம் கொள்வனவு செய்வதற்காக விவசாய அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள வவுச்சர்களுக்கான செல்லுபடிகாலத்தை எதிர்வரும் டிசெம்பர் இறுதிவரை நீடித்துள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

பல்வேறு விவசாய சங்கங்கள் முன்வைத்துள்ள வேண்டுகோளுக்கிணங்க இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள விவசாயிகளுக்கு தற்போது உரத்தைக் கொள்வனவு செய்யவேண்டிய அவசியம் கிடையாததன் காரணத்தால் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அந்த வகையில் அம்பாறை, வடக்கின் பல்வேறு பிரதேசங்கள் மற்றும் வடமத்திய மாகாணத்திலும் தற்போது சிறுபோக நெல் அறுவடை இடம்பெற்று வருவதாகவும், அதனால் அங்குள்ள விவசாயிகளுக்கு தற்போது உரத்திற்கான அவசியம் கிடையாது என்றும் அமைச்சர் தெரிவித்தார். (அ)

# 4, 603 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் இல்லை

## கிளிநொச்சி அரச அதிபர் தகவல்

கிளிநொச்சி, ஜூன் 29

கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் 4 ஆயிரத்து 603 குடும்பங்கள் கடந்த 12 ஆண்டுகளாக நிரந்தரமான வீடுகள் இன்றி வாழ்ந்து வருவதாகவும் அவர்களுக்கு நிரந்தர வீடுகளை பெற்றுக்கொடுக்கும் முக்கிய தேவை இருப்பதாகவும் மாவட்ட அரசாங்க அதிபர் திரமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாவட்டத்தில் 33 ஆயிரத்து 280 நிரந்தர வீடுகள் தேவைப்பட்டன.

அவற்றில் 28 ஆயிரத்து 677 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. எஞ்சிய வீடுகளை நிர்மாணிக்கும் தேவை இருக்கின்றது.

கரைச்சி பிரதேசத்தில் 2 ஆயிரத்து 433 குடும்பங்களுக்கும், கண்டாவளை பிரசேதத்தில் ஆயிரத்து 439 குடும்பங்களுக்கும், பூநகரில் 104 குடும்பங்களுக்கும், பச்சிளைப்பள்ளியில் 627 குடும்பங்களுக்கும் நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கவேண்டிய தேவை உள்ளது-என்றார். (அ)

# சர்வதேச நாணய நிதியத்தின் பிணை எடுப்பு இந்திய ஆதரவினால் மட்டுமே சாத்தியமானது

## கூறுகிறார் தூதுவர் மிலிந்த மொரகொட

கொழும்பு, ஜூன் 29

சர்வதேச நாணய நிதியத்தின் பிணை எடுப்பு இந்தியாவின் ஆதரவினால் மட்டுமே சாத்தியமானது என இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட தெரிவித்தார்.

கடந்த ஆண்டு நெருக்கடியின்போது 4 பில்லியன் டொலர்களை வழங்கி இந்தியா இலங்கைக்கு ஆதரவளித்தது. இந்தியா அந்த ஆதரவை வழங்கவில்லை என்றால், இலங்கை மிகவும் கடினமான சூழ்நிலைக்குச் சென்றிருக்கும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

மேலும் இலங்கையின் கடன் பொறி என்பது, இலங்கையின் செயற்பாட்டால் ஏற்பட்டது எனவும் அதற்கு வேறு எவரும் காரணம் அல்ல எனவும் மொரகொட கூறினார். (அ)

# மசாஜ் நிலையம் என்ற பெயரில் இயங்கிய பாலியல் விடுதிகள்!

## 8 பெண்கள் உட்பட 9 பேர் கைது

கொழும்பு, ஜூன் 29

மொறட்டுவை மொறட்டுவெல்ல, மொறட்டுவெல்ல தெற்கு பிரதேசங்களில் மசாஜ் நிலையங்கள் என்ற பெயரில் இயங்கிய மூன்று பாலியல் தொழில் விடுதிகளைச் சுற்றிவளைத்த பொலிஸார் 8 பெண்கள் உட்பட 9 பேரை கைது செய்தனர்.

மொறட்டுவை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பாலியல் தொழில் விடுதிகளை நடத்திய இரண்டு பெண்கள், ஒரு ஆண் மற்றும் மேலும் 6 பெண்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட பெண்கள் 24 முதல் 49 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் இவர்கள் தெஹிவளை, தொடாங்கொடை, அம்பாறை, கல்கிஸை, பரகஸ்தோட்டை, அகலவத்தை, பெந்தோட்டை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# 19ஆவது விமானப்படைத் தளபதியாகும் எயார்வைஸ் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ

கொழும்பு, ஜூன் 29

இலங்கை விமானப்படையின் 19ஆவது விமானப்படை தளபதியாக எயார் வைஸ் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ நியமிக்கப்படவுள்ளார்.

இது தொடர்பான நிகழ்வை இன்று கட்டுநாயக்க விமானப்படை தளத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, 18ஆவது விமானப்படைத் தளபதியாக மூன்று வருடங்களுக்கு மேலாக பதவி வகித்த எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன இன்றுடன் சேவையிலிருந்து விலகவுள்ளார்.



புதிய விமானப்படைத் தளபதியாக நியமிக்கப்படவுள்ள எயார் வைஸ் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, 2022 ஆம் ஆண்டு இலங்கை விமானப்படையின் புதிய தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

1969 ஆம் ஆண்டு பிறந்த இவர் கம்பஹா பண்டாரநாயக்க கல்லூரி மற்றும் கொழும்பு ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவர். (அ)

# தொலைபேசித் திருட்டில் ஈடுபட்ட இருவர் யாழ்.பொலிஸ் புலனாய்வு பிரிவால் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 29

தொலை பேசி திருட்டில் இருவர் கைது தொலைபேசி மீட்பு முறைப்பாட்டாளர் வழங்கிய தகவலில் யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரினால் கைது செய்யபட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கபட்டனர்.

கடந்த திங்கள்கிழமை பரமேஸ்வராசந்தியில் கடையொன்றில் கைத்தொலைபேசி திருட்டு இடம்பெற்றது.

சி.சி.ரி. வி கமெரா உதவியுடன் சந்தேக நபரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்தனர். அவரிடம் கைத்தொலைபேசி எதுவும் கிடைக்கவில்லை. தெரியாத நபர் ஒருவருக்கு கைத்தொலைபேசியை 10 ஆயிரம் ரூபாவுக்கு விற்றுள்ளார். நேற்று தொலைபேசி திருத்துமிடத்திற்கு குறித்த சந்தேக நபர் தொலைபேசியுடன் வந்தபோது யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்தனர்.

## ரணில் விரித்துள்ள...

பங்களிக்கவும் அனைத்துக் கட்சிகளும் ஓரணியில் ஒன்றிணைய வேண்டும். முக்கியமாக, தமிழ்க் கட்சிகள் தனித்தனியாகப் பிரிந்து நிற்காமல் எம்முடன் ஒன்றிணைந்து பயணிக்க முன்வர வேண்டும்“ - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அரசியல் தீர்வு - அபிவிருத்தி“ என்ற பெயரில் ரணில் விக்கிரமசிங்க விரித்துள்ள வலையில் சிக்க எதிர்க்கட்சிகள் தயார் இல்லை. எதிரணியிலுள்ள தமிழ்க் கட்சியினரும் ரணிலின் வலையில் சிக்க மாட்டார்கள்.

இந்த அரசாங்கம் மக்கள் ஆணை இழந்த அரசாங்கம். எனவே, பாராளுமன்றத் தேர்தலை அரசாங்கம் விரைந்து நடத்த வேண்டும். அதன்பின்னர் ஜனாதிபதித் தேர்தலும் நடைபெற வேண்டும். அப்போதுதான் மக்கள் ஆணையைக் கொண்ட அரசாங்கம் மலரும். மக்கள் ஆணையைக் கொண்ட ஜனாதிபதியும் தெரிவாவார்.

அதைவிடுத்து அனைத்துக் கட்சிகளும் ஓரணியில் இணைந்து தனக்கும் அரசாங்கத்துக்கும் ஆதரவு வழங்க வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க கெஞ்சுவது வெட்கக்கேடு.” - என்றார். (ஐ)

## 13இன் முழுமையான...

முழுமையாக இயங்கும் மாகாண சபை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதுடன், புலம்பெயர்ந்த தமிழர்களிடையே பரந்த ஈடுபாட்டுக்கு மிகவும் தேவையான நம்பிக்கையை அளிக்கும் என்ற கருத்து வளர்ந்து வருகிறது. இது நிலையான முதலீடுகளை மாகாணங்களுக்கு கொண்டு வரும். கடந்த 5 வருடங்களாக இந்த மாகாணங்களில் நடத்தப்படாத மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கு தெரிவு செய்யப்பட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இலங்கைவாழ் தமிழர் நலன்விரும்பிகள் அமைப்பு வேண்டுகோள் விடுக்கிறது. எந்த தாமதமும் நம் மக்களின் சமூக - பொருளாதார நல்வாழ்வை கடுமையாகப் பாதிக்கும்.

கடந்த 2023 ஆம் ஆண்டு மே 15ஆம் திகதி ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுத்த ஒற்றுமையான நிலைப்பாட்டை இலங்கைவாழ் தமிழர் நலன் விரும்பிகள் அமைப்பு வரவேற்கிறது. எனினும், இது மக்களுக்கோ அல்லது சர்வதேச சமூகத்துக்கோ தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையின்பேரில் தமிழர் கட்சிகளுடன் பேச்சு ஆரம்பித்துள்ளதாகவும் - முக்கியமான விடயங்களில் முன்னேற்றம் கண்டுள்ளதாகவும் ஜனாதிபதி லண்டனில் பகிரங்கமாக கூறியிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

2023 ஜூன் 20ஆம் திகதி ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 53ஆவது அமர்வில் ஐக்கிய இராச்சி யத்தின் மனித உரிமைகள் தூதுவர் ரீட்டா பிரெஞ்ச் வழங்கிய இலங்கை முக்கிய குழு அறிக்கையிலும் இது பிரதிபலிக்கிறது. நீண்ட கால தடுப்புகள் மற்றும் ஊழல், அனைத்து இன, மத சமூகங்களிலிருந்தும் அனைத்து இலங்கையர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஒரு செயல் முறையைத் தொடங்குவதற்கு இந்த நடவடிக்கைகள் ஓர் அடிப்படையை வழங்க முடியும்.

இதனைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான பிரதி உயர்ஸ்தானிகர் நடா அல் நஸீப் சமர்ப்பித்த வாய்மொழி அறிக்கை, “ஜனாதிபதி தமிழ் அரசியல் கட்சிகளுடன் ஆரம்பித்துள்ள பேச்சை நாங்கள் ஊக்குவிக்கிறோம் மற்றும் தொல்லியல் துறைக்காக நிலம் கையகப்படுத்துவதை நிறுத்துவதாக அவர் அளித்த வாக்குறுதியை வரவேற்கிறோம். வனவியல் அல்லது பாதுகாப்பு நோக்கங்கள் - உள்ளூர் மோதல்கள் மற்றும் பதற்றத்தின் அதிகரித்து வரும் ஆதாரம். மேலும் உள்ளடக்கிய நினைவகத்திற்கான திட்டங்கள் மற்றும் கடந்த காலத்தை கையாள்வதற்கான பிற வடிவங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த இரண்டு அறிக்கைகளிலும் 13ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது பற்றியோ அல்லது மனித உரிமைகள் பேரவை தீர்மானம் 51/1 இல் கோரப்பட்ட மாகாண சபைத் தேர்தல் பற்றியோ எதுவும் குறிப்பிடப்படவில்லை.

மாகாண சபைத் தேர்தலுக்கு அழைப்பு விடுக்கும் ஐயத்துக்கு இடமில்லாத அறிக்கையை ஐக்கியமாக வெளியிடுமாறும் உறுதியான பதிலை பெறுவதற்கு ஜனாதிபதியுடன் முன்கூட்டியே சந்திப்பை நாடுமாறும் தமிழ்க் கட்சிகளுக்கு இலங்கைவாழ் தமிழர் நலன் விரும்பிகள் அமைப்பு வேண்டுகோள் விடுக்கிறது.

ஜூலை 21ஆம் திகதி ஜனாதிபதியின் திட்டமிடப்பட்ட (இந்திய) பயணத்துக்கு முன்னர் இது டில்லிக்கு ஒரு தெளிவான செய்தியை அனுப்பும் என்று நாங்கள் நம்புகிறோம். மேலும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் நோக்கங்களின் கீழ் தகுந்த அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியும். கடந்த ஆண்டு ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு இன்னும் மீண்டு வரும் நிலையில், இந்தியாவின் உதவியுடன் 13ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு சிங்கள அரசியல் தலைவர்களுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு இதைவிட சிறந்த தருணம் இல்லை.

மேலும், ஐ. நா மனித உரிமைகள் ஆணையாளரின் 51/1 தீர்மானம் தொடர்பான முழுமையான எழுத்து மூலம் 2023 செப்ரெம்பர் மாதம் மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது அமர்வில் சமர்ப்பிக்கப்படும். இந்த விடயங்கள் குறித்து தமிழ் கட்சிகள் இப்போது தெளிவான அறிக்கை ஒன்று தீவிரமாக பரிசீலிக்கப்படும். முழு எழுதப்பட்ட புதுப்பிப்பு மூன்று மாதங்களில் தொகுக்கப்படும்.

தமிழ் கட்சிகளுக்கு பேச்சை ஆரம்பிக்க உரிமை உண்டு, ஜனாதிபதி அழைப்பு வரும் வரை காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. மாகாணத் தேர்தல்கள் மற்றும் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு உலகத் தமிழர்களின் பெரும் ஆதரவை இலங்கைவாழ் தமிழர் நலன்விரும்பிகள் அமைப்பு கொண்டுள்ளது.

வடக்கு - கிழக்கு சமாதானம் மற்றும் செழிப்பை உறுதிப்படுத்தும் வகையில் எமது சுயநிர்ணயம் மற்றும் அபிவிருத்தியை அடைவதற்கான எமது இலக்கை நோக்கிய முதல் படியாக இதனை பெரும்பாலான புலம்பெயர் அமைப்புகள் ஏற்றுக்கொள்கின்றன.

பல்வேறு புலம்பெயர் குழுக்களுடனான சமீபத்திய உரையாடலின்படி, மாகாண சபை தேர்தல்கள் மற்றும் 13ஆவது திருத்தம் ஆகியவை இந்தியா மற்றும் அமெரிக்காவால் முழுமையாக ஆதரிக்கப்படுகின்றன. எனவே, அனைத்து தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் அரசியல் வேறுபாடுகளைத் தீர்த்து 13ஆம் திருத்தம் மற்றும் தேர்தலுக்கான இந்த இலக்கை அடைவதற்கு உடனடியாக ஒன்றிணைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். (ஐ)

# விமானிகள் பற்றாக்குறையை அரசாங்கம் நீக்க வேண்டும்!

## விமானிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 29

விமானிகள் பற்றாக்குறை மற்றும் சேவையிலுள்ள விமானிகளுக்கு போதியளவு சம்பளம் வழங்கப்படாமை குறித்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இலங்கை விமானிகள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் குறித்த சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விமானிகள் பற்றாக்குறையால் இலங்கை விமான சேவை பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. விமான சேவை முகாமைத்துவத்தால் முன்னெடுக்கப்படும் சில தீர்மானங்களினால் விமானிகளான நாம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளோம்.

தற்போது இலங்கை விமான சேவைக்கு 330 விமானிகள் தேவைப்படுகின்றனர். எவ்வாறிருப்பினும் கடந்த ஆண்டு 70இற்கும் மேற்பட்ட விமானிகள் சேவையிலிருந்து இடைவிலகியமையால் தற்போது விமானிகள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக உரிய நேரத்தில் சேவைகளை முன்னெடுப்பதில் எழுந்துள்ள சிக்கலால், விமான பயணிகளான மக்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு இலங்கை விமான சேவையானது துறைசார் நிபுணத்துவத்துக்கு பொருத்தமான சம்பளத்தை விட குறைவான சம்பளத்தையே வழங்குகின்றது.

கோவிட் நெருக்கடியின் பின்னர் சம்பளம் 50 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. எவ்வாறிருப்பினும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட்டுக்காக நாம் அர்ப்பணிப்புடன் செயல்பட்டிருக்கின்றோம். இம்முறை இலங்கை விமான சேவை 50 மில்லியன் டொலர் இலாப மீட்டியுள்ளதாக அறியக்கிடைத்துள்ளது.

எனவே, தற்போது நிலவும் விமானிகள் பற்றாக்குறை மற்றும் சேவையிலுள்ள விமானிகளுக்கான சம்பளம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# ஜனாதிபதியின் முறையற்ற செயலுக்கு பொதுஜன பெரமுன துணைசெல்லுமா?

## டலஸ் அழகப்பெரும கேள்வி

கொழும்பு, ஜூன் 29

69 இலட்சம் மக்கள் பொம்மைகள் அல்ல என்பதை ஜனாதிபதி விளங்கிக் கொள்ள வேண்டும். ஜனாதிபதியின் முறையற்ற செயல்பாடுகளுக்கு பொதுஜன பெரமுன துணை செல்லுமா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் சுதந்திர மக்கள் சபையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகபெரும தெரிவித்தார்.

நேற்று அவர் தனது கட்சி பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் முறையற்ற அஸ்வெசும நலன்புரி திட்டத்துக்கு எதிராக நாட்டு மக்கள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபடுகின்ற நிலையில் மக்களின் கவனத்தை திசை திருப்பும் வகையில் பாராளுமன்ற அமர்வு எதிர்வரும் சனிக்கிழமை (ஜூலை 1) நடைபெறவுள்ளது.

தேசிய கடன் மறுசீரமைப்பால் வங்கி கட்டமைப்பு பாதிக்கப்படாது என ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆனால், தேசிய கடன் எவ்வாறு மறுசீரமைக் கப்படும் என்பதை அவர் குறிப்பிடவில்லை.

கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்கு அமையவே தீர்மானம் எடுக்கப்படும் என ஜனாதிபதி குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் எதிர்க்கட்சிகளிடமிருந்து ஆலோசனைகள் ஏதும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. ஆகவே, கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் பாராளுமன்றத்தின் முழுமையான ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது- என்றார். (ஐ)

## 24 மணி...

தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவங்களில் பாதிக்கப்பட்ட சிறுமிகள் 14, 15, 16, 17 வயதுடையவர்கள். இவர்கள் கொழும்பு, கம்பஹா, பதுளை, அநுராதபுரம் மாவட்டங்களை சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## உள்நாட்டு...

தலைமையில் நடைபெற்றது. இதன் போது, கடன் மறுசீரமைப்புத் திட்டம் அமைச்சரவையில் சமர்ப்பிக் கப்பட்டதுடன், அந்த திட்டத்தை அமைச்சரவை ஏகமனதாக அங்கீகரித்தது.

இதனைத் தொடர்ந்து கடன் மறுசீரமைப்புத் திட்டம் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தில் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டதாகவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இதற்கமைய அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக இந்த பிரேரணை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. இதற் காக நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் பாராளுமன்றத்தை கூட்டுவதற் கான அறிவிப்பை சபாநாயகர் ஏற்கனவே வர்த்தமானியில் வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கலைக்கப்பட்ட...

சில சரத்துகளை திருத்துவதற்காக இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள் ளது.

இந்த சரத்துகள் திருத்தப்பட்டால் தற்போது கலைக்கப்பட்டுள்ள மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகளை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் நிர்ணயிக்கும் கால எல்லை வரை மீண்டும் நிறுவ முடியும்.

இந்த சட்டமூலம் ஜூன் 26 ஆம் திகதியிடப்பட்டு வர்த்தமானியாக வெளியிடப்பட்டுள்ளது. (ஐ)

## துப்பாக்கி...

காரை செலுத்திய நபர் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அதே இடத்தைச் சேர்ந்த 38 வயது நபரே காயமடைந்தவர் என்றும் பொலிஸார் கூறினர்.

இரு குழுக்களுக்கு இடையிலான முரண்பாடே இந்த துப்பாக்கி சூட்டுக்கு காரணமாக இருக்கலாம் என்று தெரிவித்த பொலிஸார், இந்தத் தாக்குதலுக்கு உள்ளூர் தயாரிப்பான இடியன் வகை துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்றும் கூறினர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# சொந்த காணிகள் இராணுவத்திடம்! அரசின் உதவித்திட்டங்களும் இல்லை!!

## மாவட்டசெயலக வாயிலை மூடி கேப்பாபிலவு மக்கள் போராட்டம்

முல்லைத்தீவு, ஜூன் 29

**அரசின் அஸ்வெசும கொடுப்பனவில் பெயர் நீக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து கேப்பாபிலவு மக்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாகக் கூடி கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றினை மேற்கொண்டனர்.**



இதன்போது மாவட்ட செயலக நுழைவாயிலில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. முல்லைத்தீவு மாவட்ட பதில் அரசாங்கா அதிபர் க.கனகேஸ்வரன் வாசலில் செல்லும்போது அவரை மறித்து தங்கள் ஆதங்கத்தை மக்கள் வெளிப்படுத்தினர்.

அரசின் உதவித்திட்டம் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்ற கருத்தையும், மக்களின் சொந்த காணிகள் இது வரை விடுவிக்கப்பாடாத நிலையில் அரசின் இந்த உதவித்திட்டமும் கிடைக்கவில்லை என்ற ஆதங்கத்தை யும் மக்கள் தெரிவித்தனர்.

மாவட்டசெயலக வாசலை மறித்த மக்களுடன் முல்லைத்தீவு மாவட்ட பதில் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் கலந்துரையாடிய பின்னர் குறிப்பிட்ட வர்களை மாவட்ட செயலக மண்டபத்துக்கு அழைத்துச் சென்று தெளிவுபடுத்தினார்.

இதனடிப்படையில் மக்கள் முறையீடுகளை மேற் கொள்ளுமாறும் தாம் உரிய நடவடிக்கை எடுப்பதாக வும் அவர் அளித்த உறுதிமொழியின் அடிப் படையில் போராட்டம் கைவிடப்பட்டது.

# கிளிநொச்சி பிராந்திய சுகாதார பணிப்பாளரானார் சேரலாதன்



*கிளிநொச்சி, ஜூன் 29*

*கடந்த சில மாதங்களாக வெற்றிடமாக காணப்பட்ட கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிக்கு புதிதாக சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்ட மருத்துவ கலாநிதி சேரலாதன் நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்*

*இவர் முன்னர் அக்காரயன் வைத்தியசாலை பொறுப்பு வைத்தியராகவும்,கிளிநொச்சி மாவட்ட பதில் திட்டமிடல் வைத்திய அதிகாரியாகவும் நீண்டகாலம் பணியாற்றியவர். (அ)*

# நெல்லுக்கு நியாய விலை வழங்கக் கோரி கிளிநொச்சியில் விவசாயிகள் போராட்டம்



*கிளிநொச்சி, ஜூன் 29*

*நெல்லுக்கான விலையினை உரிய நேரத்தில் அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படுவதில்லை என தெரிவித்து போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.*

*இந்தப் போராட்டம் நேற்று காலை 9 மணியளவில் கிளிநொச்சி, கரடிபோக்குச் சந்தியில் ஆரம்பமானது.*

*கிளிநொச்சி இரணைமடு விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் ஒன்றிணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.*

*நெல் சந்தைப்படுத்தல் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பித்து கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை சென்றடைந்தது. அங்கு விவசாயிகளால் மகஜர் கையளிக்கப்பட்டது.*

*தற்பொழுது நெல் 48 தொடக்கம் 50 ரூபாய்க்கே கொள்வனவு நடைபெறுவதாகவும், தமக்கு அறுவடை முடிவில் செலவீனமே 85 ரூபாய் முடிவடைவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.*

*நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியசாலைகள் அனைத்துமே வெறுமனே காணப்படுவதாகவும், இருப்பினும் நெல் கொள்வனவு உரிய காலத்தில் உரிய விலையில் கொள்வனவு செய்யப்படவில்லை எனவும் அவர்கள் கூறினர்.*

*மகஜரை மேலதிக அரசாங்க அதிபர் சிறிமோகனிடமும், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனிடமும் அவர்கள் கையளித்தனர்.*

# புலிகளுக்கு எதிரான போரில் இஸ்ரேல் மீதும் போர்க்குற்றம்!

## விசாரணைநடத்துமாறுவலியுறுத்து

*கொழும்பு, ஜூன் 29*

*இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு போரில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக, இலங்கை அரசாங்கத்துக்கு ஒத்தாசை வழங்கி போர்க்குற்றத்துக்கு உடந்தையாக இருந்தமை தொடர்பில் இஸ்ரேலுக்கு எதிராகவும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.*

*இந்தக் கோரிக்கையை இஸ்ரேலின் மனித உரிமைகள் அமைப்புகளைச் சேர்ந்த யெஸ் ஜிவல் மற்றும் டொரட் செடெக், மனித உரிமைகள் சட்டத்தரணி ஈடேய் மெக் ஆகியோரே முன்வைத்துள்ளதாக அல் ஜெசீரா தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.*

*போரின்போது நடந்த போர்க்குற்றங்களை ஐக்கிய நாடுகள் சபையும், மனித உரிமை அமைப்புகளும் ஆவணப்படுத்தியுள்ளன.*

*போரின்போது, பொதுமக்களுக்கு எதிராக இழைத்த போர்க்குற்றங்களுக்கு உடந்தையாக இருந்த இலங்கை அரசாங்கத்தின் சர்வதேச ஆதரவு நாடுகளில் இஸ்ரேலும் ஒன்றெனக் கண்டறியப்பட்டுள்ளது.*

*2000 ஆம் ஆண்டுகளில், இஸ்ரேலின் இராணுவ தொழில்நுட்பத்தை கணிசமான அளவில் கொள்வனவு செய்து, ஆசியாவில் இஸ்ரேலின் மிக முக்கியமான வாடிக்கையாளர்களில் ஒருவராக இலங்கையும் மாறியது.*

*அத்துடன், போரில் ஈடுபட்ட இலங்கைப் படையினருக்கும் இஸ்ரேல் பயிற்சியும் அளித்துள்ளது. இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட கபிர் விமானங்கள் உள்நாட்டுப் போரில் முக்கிய பங்கு வகித்துள்ளன.*

*இலங்கையின் உள்நாட்டுப் போரில் இஸ்ரேலிய ஆயுதங்களும் இராணுவ உபகரணங்களும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என குறித்த ஆதாரங்கள் வெளிப்படுத்துகின்றன.*

*இந்தநிலையில், போர்க் குற்றங்களில் இஸ்ரேலின் தொடர்பை வெளிப்படுத்தவும், வழக்கு தொடரவும் தாம் விரும்புவதாக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.*

*எனினும் இலங்கைக்கு எதிராக போர்குற்ற விசாரணைகள் கோரப்படுகின்றபோதிலும் இஸ்ரேல் மற்றும் பிற நாடுகளில் இருந்து அவர்களுக்கு மறைமுகமாக உதவியவர்கள் மீது வழக்கு தொடரப்படவில்லை என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.*

*போருக்குப் பின்னர் இஸ்ரேலுக்கான தூதுவராக நியமிக்கப்பட்ட இலங்கையின் முன்னாள் தலைமை அதிகாரி டொனால்ட் பெரேராவும் போரில் இஸ்ரேல் உதவியதை உறுதிப்படுத்தியுள்ளதாக கடந்த 2010 இல் இஸ்ரேலிய ஊடகமொன்று அளித்த செவ்வியில் அவர் இதனை பதிவிட்டார் என அல் ஜசீரா குறிப்பிட்டுள்ளது. (அ)*

# மருந்து வழங்குநர்களுக்கு 30 பில்லியன் ரூபா நிலுவை!

*கொழும்பு, ஜூன் 29*

*மருந்து விநியோகஸ்தர்களுக்கு 30 பில்லியன் ரூபா நிலுவைக் கொடுப்பனவை செலுத்தவேண்டியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.*

*இதன் காரணமாக குறித்த நிறுவனங்களிடமிருந்து தொடர்ச்சியாக மருந்துகளை கொள்வனவு செய்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.*

*இது தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளர் ஜானக ஸ்ரீ சந்திரகுப்தவிடம் வினவியபோது, இந்த பிரச்னைகள் தொடர்பில் நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளதாக கூறினார்.*

*அதற்கமைய, நிலுவைக் கட்டணங்களைச் செலுத்துவதற்கான நிதியை உடனடியாக விடுவிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.*

*இதனிடையே, நேற்று முன்தினம் முதல் அமுலாகும் வகையில் 60 வகையான மருந்துகளின் விலைகள் திருத்தியமைக்கப்பட்டு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலொன்று கடந்த 15 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)*

# புதிய பொலிஸ்மா அதிபராக களங்கமற்றவரை நியமிக்குக!

## சட்டத்தரணிகள் சங்கம் மீண்டும் கோரிக்கை

*கொழும்பு, ஜூன் 29*

*பொலிஸ்துறையில் முன்னுதாரணமானவரும், களங்கமற்றவராகவும், இலங்கை காவல்துறையின் மீது பொதுமக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கக்கூடிய வருமான ஒருவரே, அடுத்த பொலிஸ்மா அதிபராக இருக்கவேண்டும் என்பதை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.*

*ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அந்த சங்கம் இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளது.*

*நீதி நிர்வாகத்திற்கும் சட்டத்தின் ஆட்சிக்கும் பொலிஸ்துறை மீதான பொதுமக்களின் நம்பிக்கை இன்றியமையாதது என்பதால், பொலிஸ்மா அதிபர் பதவிக்கு சிறந்த ஒருவர் நியமிக்கப்படுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)*

*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*